பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 28 வியாழக்கிழமை 14.12.2017 கதிர் 39

## திருமலையில் தமிழரசு வேட்புமனு தாக்கல்

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல், சேருவில, திருகோணமலை பட்டணமும் சூழலும், தம்பலகாமம் ஆகிய பிரதேசசபைகளுக்கான வேட்புமனுக்களை தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று திருகோணமலைமாவட்டத்தேர்தல் செயலகத்தில்தாக்கல்செய்தது.

# புளொட்டுக்குள் கடும் அதிருப்தி!

## தேர்தலில் இருந்து விலகும்?

யாழ்ப்பாணம், டிசெம்பர் 14

தேர்தல் பங்கீடு தொடர்பாக இணக்கம் காணப்பட்ட ஏற்பாடுகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை தன்னிச்சையாக - ஒரு தலைப்பட்சமாக - தங்களிடமிருந்து பறிப்பதாகக் கருதி, விசனமடைந்து, கடும் அதிருப்தியுற்றிருக்கும் புளொட் கட்சி இந்தத் தேர்தலில் இருந்து ஒதுங்கியிருப்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என மிக நம்பகரமாக அறியவந்தது.

பக்கம் 03 »

## ரயில் சாரதிகள் போராட்டம் நேற்று முடிவு



கொழும்பு, டிசெ. 14

கடந்தஒருவாரமாகமுன்னெடுக்கப்பட்டு வந்த ரயில் சாரதிகளின் பணி பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

இதற்கமைய நேற்று

பக்கம் 03 »

## வலி.மேற்குத் தலைமையை பறித்தெடுத்தது தமிழரசு!

### புளொட் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளினதும் தலைவர் உடன்பாடு கண்டு, ஒப்பமிட்டு இணங்கிய விடயத்துக்கு முரணாக

பக்கம் 03 »

## மேயர் வேட்பாளர் சி.வீ.கே. இல்லை!

### அவரே தெளிவுபடுத்தினார்



யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாநகர சபையின் முதல்வர் வேட்பாளராக எனது பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் நான் அதில் போட்டியிட அக்கறை காட்டவில்லை.

- இவ்வாறு

பக்கம் 18 »





அப்ப... தேர்தல் உடன்பாடு சாண் ஏற முழம் சறுக்கின கதைதான் பாருங்கோ...!

## மைத்திரி - மஹிந்த இணைவை மூர்க்கமாக எதிர்க்கிறார் பஸில்

### முரண்பாடு வலுத்ததால் அமெ. பறந்தார் கோட்டா

கொழும்பு, டிசெ. 14

முன்னாள்பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குத் திடீரெனப் பயணமாகியுள்ளார்.

சுதந்திரக் கட்சியுடன் மஹிந்த இணைவதற்கானமுயற்சிகளைபஸில் ராஜபக்ஷ தடுத்து வருவதால்ஏற்பட்டுள்ளமுரண்

பக்கம் 03 »

## மஹிந்தவுடன் எமக்கு முரண்பாடு கிடையாது

### கூறுகின்றார் வீரவன்ஸ



கொழும்பு, டிசெ. 14

ஒன்றிணைந்த கூட்டு எதிரணிக்கும், எமக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளும் கிடையாது. அதேபோல முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எமக்கும் இடையே கருத்து வேறுபாடுகள்

பக்கம் 18 »

## குடாக்கடலில் சிறிது காலம் மீன்பிடித் தடை வேண்டும்

### மீன்வளத்தைப் பெருக்குவதற்கு மாகாண சபையில் யோசனை

யாழ்ப்பாணம், டிசெ .14

வடக்குக் கடலில் மீன் வளத்தைப்பெருக்குவதற்காகச் சிறிது காலத்துக்கு மீன்பிடித் தடையை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தக் காலப் பகுதியில்மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று

பக்கம் 18 »

## இரணைமடுக் குடிதண்ணீர் யாழ்ப்பாணத்துக்கு வருமா?

### தெளிவுபடுத்தக் கோருகிறார் ஆர்னோல்ட்

யாழ்ப்பாணம், டிசெ.14

இரணைமடுவிலிருந்து யாழ். குடாநாட்டுக்குக்குடிதண்ணீர்கொண்டு வரும் திட்டம் குறித்து பரவலாகப்பேசப்பட்டபோதும் தற்போது அந்தத் திட்டம் எத்தகைய நிலையில் உள்ளது என்பதையும்,

பக்கம் 03 »

## வடக்கில் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நீர்க்கொள்கை இல்லாமையே காரணம்

### மாகாண சபையில் சாடினார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கில் எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள நீர்ப்பிரச்சினைக்கு நீர்க் கொள்கை இல்லாதமையே பிரதான காரணம் என வடக்கு மாகாண சபை

பக்கம் 03 »

## ஒற்றையாட்சியை நிராகரிக்க சைக்கிளுக்கு வாக்களியுங்கள்!

### தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 14

ஒற்றையாட்சியை நிராகரிப்பதாயின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வேண்டும் எனக்

பக்கம் 18 »

## 7 புலிகளுக்கு 56 வருட சிறை

கொழும்பு, டிசெ. 14

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் 7 பேருக்குத் தலா 56 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அநுராதபுரம் சிறப்புமேல்நீதிமன்றநீதிபதி மஹேஸ் வீரமன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

வில்பத்து தேசிய

பக்கம் 18 »

## அம்மாச்சி உணவகத்தின் சுகாதாரத்தில் குறைபாடு

### சபையில் சுட்டிக்காட்டினார் தவராசா

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் சகல இடங்களிலும் எமது மக்கள் மத்தியில் பிரபலயம் அடைந்துள்ள அம்மாச்சி உணவகத்தின் சுத்தம், சுகாதாரம் குறைந்துள்ளது என மக்கள் கவலை வெளியிடுகின்றனர் என்று வடக்கு மாகாணஎதிர்க்கட்சித்தலை

பக்கம் 18 »

## நாமலுக்கு டுபாய் செல்ல அனுமதி

கொழும்பு, டிசெ. 14

நாமல் ராஜபக்ஷ உட்பட அறுவருக்கு எதிரான வழக்கில், பிரதிவாதிகளால் கோரப்பட்ட ஆவணங்கள் இருக்குமாயின் அவற்றைக் கையளிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றநீதிபதி சம்பத்அபேகோன், சட்டமா அதிபர்

பக்கம் 18 »

## வடக்குக் கல்விக்கு அதிக நிதி அதனால் ஏதும் பயனுண்டா?

### சபையில் நேற்றுத் தவராசா கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாண சபையில் கல்விக்கே அதிக நிதி ஒதுக்கப்படுகின்றபோதும் அதில்நாங்கள்முன்னேற்றமடைந்திருக்கிறோமா என்று கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா.

அடுத்தஆண்டுக்கான

பக்கம் 18 »

## வடக்குப் பாடசாலைகளை 8 மணிக்கே ஆரம்பியுங்கள்!

### மாகாண சபையில் நேற்று வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணப் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கின்றனர். இதனை முன்னர் இருந்தமை போன்று 8 மணிக்கே ஆரம்பிக்க வேண்டுமென்று நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வில் வலியுறுத்தப்பட்டது.

பக்கம் 18 »

## காணாமற்போனோர் விவகாரம்;

# காலத்தை இழுத்தடிக்க முயற்சிக்கிறார் மைத்திரி

## புதிய பதிவுக்கு ஒத்துழைக்க உறவினர்கள் மறுப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 14

**வலிந்து காணாமற்போனோர் விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடித்துக் காலம் கடத்துவதற்காகவே அரசு புதிதாகப் பதிவுகளை மேற்கொள்ளும் திட்டத்தைச் செயற்படுத்துகின்றது. இதனை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்.**

**- இவ்வாறு நேற்று வவுனியா மாவட்ட செயலரிடம் நேரில் சென்று சுட்டிக்காட்டியுள்ளனர் காணாமற் போனோரின் உறவினர்கள்.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவுகள்வவுனியா மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலர் சோமரத்தின விதான பத்திரனவை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக புதிதாகப் பதிவுகளைமேற்கொள்ளுமாறுஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்துள்ள திட்டத்துக்கு தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட அவர்கள், அது தொடர்பானகடிதம்ஒன்றையும் மாவட்ட செயலரிடம் கையளித்தனர்.

கடந்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாகஜனாதிபதிஆணைக்குழு வவுனியா மாவட்ட செயலகத்தில் முழுமையான பதிவுகளை மேற்கொண்டிருந்தது. ஆனால் முன்னாள் ஜனாதிபதியும் இந்நாள் ஜனாதிபதியும்காலத்தைஇழுத்தடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் திட்டத்துக்கு நாங்கள் ஒத்துழைக்கமாட்டோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாக உடனடியாக எமக்கு நல்லாட்சி அரசு பதில் வழங்க வேண்டும் என உறவினர்கள் மாவட்ட செயலரிடம் எடுத்துக் கூறினர். (ஐ)

### உரிமையை மீறும் நிபந்தனையுடன்

## ஆசிரியைக்கு வழங்கிய இடமாற்றத்தை இடைநிறுத்தியது யாழ். மேல்நீதிமன்று

யாழ்ப்பாணம், டிசெ. 14

குடிமகன் ஒருவரின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் நிபந்தனை விதித்து ஆசிரியை ஒருவருக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தை இடைநிறுத்துமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுக் கட்டளையிட்டார்.

எதிர் மனுதாரர்களான வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின்செயலாளர்மற்றும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஆகியோருக்கு இந்தக் கட்டளையை உடனடியாக அனுப்பிவைக்குமாறும் அவர்கள் மூவரையும் எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை அனுப்பிவைக்குமாறும் மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம்-பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு 6ஆம் மாதம் மாணவிகள் இருவரைக் கொடுமைப்படுத்தினார் என்று ஆசிரியர்ஒருவர்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதனை அந்தப் பாடசாலையில் கடமையாற்றும் சங்கீத ஆசிரியை ஒருவரே முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த விடயம்அதிபர்,ஆசிரியர்களால் மூடிமறைக்கப்பட்டது. எனினும் பாடசாலைமாணவர்கள்தொடர் போராட்டத்தில்ஈடுபட்டதால்,மாணவிகள் இருவர் கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் கைது செய்யப்பட்டமையுடன், இந்த விடயத்தை மூடிமறைத்த குற்றச்சாட்டில் அதிபர் மற்றும் ஆசிரியர் சிலர் தடுத்துவைக்கப்பட்டு நீதிமன்றால் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மாணவிகள் இருவர் கொடுமைப்படுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சங்கீத ஆசிரியை சாட்சியம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் சங்கீத ஆசிரியைமீதுகல்வித்திணைக்களத்தால் ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப் பட்டது. அதன்நிறைவில்கடந்தநவம்பர் 11ஆம் திகதி ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றம் எனக் குறிப்பிட்டுச் சங்கீத ஆசிரியைக்கு வடக்கு மாகாணக்கல்விப்பணிப்பாளர் இடமாற்றக் கடிதம் அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் "முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்ற பரிந்துரைக்கு அமைவாக 01.01.2018 இலிருந்து செயற்படும் படியாகத் தாங்கள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றீர்கள். அத்துடன் தங்களுடைய சேவைக் காலத்தில் மீண்டும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுகின்றது" - என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த இடமாற்றக் கடிதத்துக்கு சங்கீத ஆசிரியை தனது சட்டதரணி குமாரவடிவேல் குருபரன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்தார்.

கடந்த நவம்பர் 11ஆம் திகதி ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றம் எனக் குறிப்பிட்டு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பிவைக்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தை இடைநிறுத்தக் கட்டளை வழங்குமாறும் ஒழுக்காற்று விசாரணையில் மனுதாரரைக் குற்றவாளியாக இனங்கண்டமையை சட்டரீதியற்ற வெற்றும் வெறிதானதும் என எழுத்தாணை ஆக்குமாறும் (நீக்குமாறும்) எழுத்தாணை மனுவில் மனுதாரர் கோரினார்.

இந்த மனு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில்விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தங்களுடைய சேவைக் காலத்தில் மீண்டும் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளமை எதிர்காலத்துக்கு வழங்கப்படுகின்ற தண்டனையாக முதல் தோற்றளவில் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தப் பந்தி குடிமகன் ஒருவரின் உரிமையை மீறுகின்ற செயற்பாடாக மன்று முதல் தோற்றளவில் கருதுகின்றது. எனவே, இந்த இடமாற்றக் கடிதத்தை நடைமுறைப்படுத்த இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. இந்தத் தடை உத்தரவு வரும் ஜனவரி 10ஆம் திகதிவரை நடைமுறையிலிருக்கும்.

இந்த இடைக்காலத் தடை கட்டளையையும், எதிர்மனுதாரர்களை எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளையும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்குஉத்தரவிடப்படுகிறது என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார். (ஐ)

### தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தல்:

## பகுப்பாய்வு அறிக்கைகளை வைத்து விசாரணையை தொடர்கிறது சி.ஐ.டி.

கொழும்பு, டிசெ. 14

2008ஆம் ஆண்டு தமிழ் மாணவர்கள்ஐவர் உட்பட 11பேர் கடத்தப்பட்ட வழக்கில், இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) அந்த அறிக்கைகளைக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக அறிவித்தனர்.

கோட்டைநீதிவான்நீதிமன்ற நீதிவான்லங்கா ஜயரத்ன முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க உட்பட அறுவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

2008ஆம் ஆண்டு தெஹிவளையில் வைத்து ரஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஷ்வரம் ராமலிங்கம், மொஹமம்ட் நிலான், மொஹமம்ட் சாஜித் ஆகிய மாணவர்கள் கடத்தப்பட்டிருந்தனர்.

அதே ஆண்டு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், மன்னார் அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன், ரொஷான்லியோன், கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆரச்சி, திருகோணமலையைச்சேர்ந்த கனகராஜா ஜெகன், தெஹிவளையைச் சேர்ந்த மொஹம்மட் அலி அன்வர் ஆகியோரும் கொழும்பில் கடத்தப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கண்டவாறு கூறினர். (ஐ)

## தென்மாகாண பட்ஜெட்; மஹிந்த தரப்பும் ஆதரவு



கொழும்பு, டிசெ .14

தென் மாகாண சபையில் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் 41 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது. தென் மாகாண சபையில் நேற்று வரவு - செலவுத் திட்ட நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்களிப்பில் ஆதரவாக 47 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் கூட்டு எதிரணி ஆதரவாக வாக்களித்த நிலையில், ஜே.வி.பி.எதிராகவாக்களித்தது. இந்தநிலையில்மேலதிக41 வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# பால் பதனிடும் தொழிற்சாலை வடக்கில் மீண்டும் வேண்டும்

## சபையில் சத்தியலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் பால் பதனிடும் தொழிற் சாலையை மீள ஆரம் பிக்கவேண்டுமென முன் னாள் அமைச்சரும் உறுப் பினருமான ப.சத்தியலிங் கம் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண சபை யின் 2018 ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட் டத்தின் இரண்டாம் நாளில் விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சு மீதான விவா தத்தில் பங்கேற்று உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் பல ஆண்டுகளாக இயங் காமல் இருக்கும் பால் பதனிடும் தொழிற் சாலையை மீள ஆரம் பியுங்கள் என கோரிக்கை விடுத்தும் இன்று வரை அதற்கான ஆரம்ப நட வடிக்கையைக் கூட எடுக்க வில்லை.

எமது மாகாண சபை உறுப்பினர்களில் பலர் வாழ்வாதார உதவியாகப் பசுமாடுகளைக் கொடுக் கிறார். அவ்வாறு வழங்கும் மாடுகளில் இருந்தும் எமது கால்நடை வளர்ப் பாளர்களின் பாலைப் பதனிட ஒரு பால் பதனிடும் தொழிற்சாலை இல்லை.

எனவே நீண்டகால மாக இயங்காமல் இருக் கும் பால் பதனிடும் தொழிற் சாலையை மீள ஆரம்பிக்க வடக்கு மாகாண அமைச்சு ஒரு குழுவை நியமித்து விரைவாக அதனை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பைக்கெற்றுக்களில் அடைக்கப்பட்ட பால் உற் பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கவேண் டும் – என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சிவனேசன், வடக்கில் தற்போது மக்கள் பாலை விற்று அங்கர் வாங்கும் நிலை காணப் படுகிறது. வடக்கு மக்கள் பால் உற்பத்தியில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் பால் உற்பத்தியும் குறை வடைந்து வருகின்றது.

சில இடங்களில் பசுப் பாலைக் கறந்து விற்று விட்டு அங்கர் பால்மா வாங்கிச் செல்கின்றனர். இவ்வாறு தான் வடக்கின் பால் உற்பத்தி நிலை. பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்று வவுனியாவில் உள்ளது. எனினும் அது முறையற்ற விதத்தில் இயங்கி வருகின்றது. இது தொடர்பில் கூட்டுறவு அமைச்சு விசாரணை செய்யவேண்டும் – என் றார். (ஐ-7)

## வலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாமம் மேற்கு (சுழிபுரம்) பிரதேச சபையின் தலை மைப் பதவியை இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னிச் சையாக – ஒருதலைப்பட்சமாக – புளொட்டிடம் இருந்து பறித்துள்ளது.

– இப்படி கருத்து வெளியிட்டார் புளொட் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி.

தொகுதிப் பங்கீடு தொடர்பாக நேற்று மாலை இலங் கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சேனாதிராசா மற் றும் அக்கட் சியின் எம்.பியான எம்.ஏ.சுமந் திரன் ஆகி யோரை சித்தார்த்தன் சந்தித்தார்.

தேர்தல் பங்கீட்டில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையை புளொட்டுக்கு விட்டுக் கொடுத் தமை தொடர்பாக தமிழர சுக் கட்சிக்குள் சில தரப்புக்கள் கொதித்துப் போயிருந்த நிலையில், அதனை மீளத் தமிழரசுக் கட்சி எடுத்துக் கொள்ளவிருப்ப தாக வெளியான செய்திகள் குறித்து சித்தார்த்தனிடம் கேட்டோம். அந்தப் பிரச்சினை தீர்க்கப் பட்டு விட்டதா என்று கேட்டதற்கு –

"மூன்று கட்சிகளினதும் தலைவர்கள் ஒப்பமிட்டு காணப்பட்ட இணக்கத்தின்படி வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்கான தலைமை மற்றும் உறுப்பினர்களை வேட்புமனுவுக்கு நியமிக்கும் உரிமை எங்களுடையது.

"ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எங்களது சம்மதமோ, இணக்கமோ இன்றி தாங்களே அந்தப் பிரதேச சபைக்குத் தலைவர்களையும் நியமிக்கப் போகின்றோம் என ஒரு தலைப்பட்சமாகக் கூறு கின்றார்.

அதற்கு நாம் உடன்படவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சியின் பெயரிலேயே வேட்பு மனுக்கள் தாக்கல் செய் யப்படுகின்றமையால் அந்த அதிகாரம் அவர்களிடமே உள்ளது.

"இந்த ஒருதலைப்பட்ச நடவடிக்கையை நாம் பார்த்தி ருப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இது தவ றான நடவடிக்கை." – என்றார் அவர். (உ)

## புளொட்டுக்குள்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

"தேர்தலில் இருந்து விலகுகிறோம் என்று பகிரங்க மாக அறிவித்து, கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பைப் பங்கப்படுத்தும் கைங்கரியத்தைச் செய்யாமல் – சத்தம் சந்தடியின்றி – தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்கும் போக்கைக் கடைப்பிடிக்குமாறு ஓர் கட்சிக்குள் மூத்த தரப்புகள் சில கட்சித் தலைவர் சித்தார்த்தனுக்கு நேற்று கடும் அழுத் தம் கொடுத்து வருகின்றன என்பதை அறிய முடிந்தது."

– என்று புளொட் கட்சியின் மற்றொரு மூத்த உறுப்பினர் 'காலைக்கதிருக்குத்' தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குரிய தலைமையை நியமிக்கும் வாய்ப்பு புளொட் அமைப்பிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கின்றமை குறித்து, புளொட் தலைவர் சித்தார்த்தனுடன் உரையாடிய சமயமும் தேர்தல் விடயத் தில் ஆர்வமில்லாதவர் போன்ற தொனியிலேயே அவ ரது பதில்கள் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இது குறித்து, அவருக்கு நெருக்கமான தரப்புகளிடம் கேட்டபோது –

"ஆம். நடக்கும் சம்பவங்கள் புளொட் தலைமைக்கு வெறுப்பையும், அதிருப்தியையும் தந்துள்ளன. ஆனால், அதற்காகத் தேர்தல் சமயத்தில் கூட்டமைப்பின் ஐக் கியத்தை உடைக்கும் வேலையையோ, அதைப் பாதிப்புற வைக்கும் கைங்கரியத்தையோ செய்யும் எண்ணம் எதற்கும் கட்சித் தலைமை இணங்காது என்பது எமக் குத் தெரியும். ஆனாலும் ஒரு உறுப்பினர்கள் பதவி களுக்காக அவர்களுக்குப் பின்னால் சுயமரியாதையின்றி இழுபடாமல், தேர்தலிலும், பிரசாரத்திலும் பங்குபற்றாமல் ஒதுங்கியிருந்து அரசியல் நாகரிகத்துடன் எதிர்ப்பைக் கோடி காட்டலாம் என்ற அழுத்தம் மூத்த உறுப்பினர்கள் பலராலும் கட்சிக்குத் தலைமைக்கு வழங்கப்பட்டு வரு கின்றது. கட்சித் தலைமை அவை குறித்து பரிசீலிக்கின்றது என்பதை மட்டும் என்னால் இப்போதைக்குக் கூற முடியும்." – என்றார் அந்தப் பிரமுகர். (உ)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் தொடக்கம் இந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக ரயில்வே திணைக் களத்தின் தொழிற் சங்கம் அறிவித்துள்ளது.

புதிதாக ரயில் சாரதிகளை இணைத்துக் கொள்வது தொடர்பாக காணப்படும் நடை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு கோரி கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சங்க நட வடிக்கை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்ட தோடு வழமைக்கு மாறாக பயணிகள் பஸ் போக்கு வரத் திலும் நெருக்கடி நிலைமை நிலவியது.

இதனைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அமைச்சர் சரத் அமுனுகம தலைமை யில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு நேற்றுப் புதன்கிழமை ரயில்வே தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் கொழும்பில் வைத்து கலந்து ரையாடியது. இதனையடுத்தே பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபையின் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாளில் விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சு மீதான விவாதத்தில் பங் கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மக்களின் குறிப்பாக யாழ். மக்களின் நீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக இரணைமடுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருந்தது. இரணைமடுக் குளத் திலிருந்து குடிதண்ணீரைக் கொண்டு வருவதனூடாக நீர்ப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய முடியுமென எண்ணியே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்ட போதும் இதற்குத் தற்போது ஆதரவும் எதிர்ப்புக்களும் எழுந்துள் ளமை மிக வேதனையளிப்பதாக உள்ளது.

ஏனெனில் புலிகள் காலத்திலேயே இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டிருந்தது. அப்போது ஜப்பான் நிறுவனமொன்று இதனைச் செய்ய முற்பட்டபோது புலிகள் அதனை நிராகரித்திருந்தனர். அதன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி செய்வதற்கு முன்வந்தபோது அதனை ஏற்றுக்கொண்டு திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது அந்தத் திட்டம் பாதிப்பை ஏற்ப டுத்துமென்றும், புலிகள் இராஜதந்திர ரீதியாகவே இதற் குச் சம்மதம் தெரிவித்தனர் எனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும். ஆனால் ஒரு சிலரது அரசியல் நடவடிக்கைகளால் கிளிநொச்சி விருந்து நீரைக் கொண்டுவர முடியாத நிலையும் உள்ளது.

இந்தத் திட்டம் 23,000 ஆயிரம் கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்த முற்பட்டபோதும் இதற்கு உரிய நீர்த் திட்டக் கொள்கை வகுக்கப்படாமையால் இந்த நிதி நட்டாற் றில் விடப்பட்டது போன்று உள்ளது. ஆனால் கிளிநொச்சி மக்களது எதிர்ப்பை மீறியோ அல்லது அவர்களுக்கு நீரில்லாமலோ இங்கு நீர் கொண்டு வருமாறு நாம் கேட்கவில்லை. ஆகவே இதில் சகலரையும் இணைத்து ஒத்துழைப்புடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி யாழ்ப்பாணத்துக்கு நீரைக் கொண்டு வாருங்கள்.

அங்கிருந்து நீர் எடுக்க முடியாத வறட்சியான நேரத் தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தி அதனூடாக நீரைப் பெற்றுக் கொள்ள முடியும் – என்றார். (ஐ-7)

## மஹிந்தவுடன்...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை. அதேபோன்று வாசுதேவ நாணயக்கார வும் அதில் கலந்து கொள்ள வில்லை என நினைக்கின் றேன். அன்று கூட்டம் நடைபெற்ற அதே சமயம் தினேஷ் குணவர்தன திருமணம் ஒன்றிக்குச் சென்றதால் அதில் கலந்து கொள்ளவில்லை, கம்மன்பிலவுக்கும் தனிப் பட்ட தேவைகள் இருந்தன.

எனக்கு உடல்நிலைக் குறைப்பாட்டால் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இதனை அர சியல் சர்ச்சையாக மாற்றிவிட்டனர் – என்றார். (ஐ)

## இரணைமடுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் வருமா? இல்லையா? என்பதையும் வெளிப்படுத்த வேண் டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் கோரினார்.

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதம் நேற்று நடைபெற்றது. விவ சாய மற்றும் மீன்பிடி அமைச்சு மீதான விவாத வேளை யிலேயே ஆர்னோல்ட் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டபோது இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டு வருவது குறித்துப் பேசப்பட்டது. அதன் பின் னர் அந்தத் திட்டத்துக்கு ஆதரவும் எதிர்ப்பும் எழுந்தது. இந்நிலையில் தற்போது அந்தத் திட்டம் என்ன நிலை யில் உள்ளது என்றே தெரியவில்லை.

குடிதண்ணீர் யாழ்ப்பாணம் வருமா இல்லையா என்பதை முதலில் வெளிப்படுத்த வேண்டும். குடிதண் ணீரை வைத்து யாரும் அரசியல் விளையாட்டு விளை யாடக் கூடாது. குறிப்பாகக் குளத்தின் நீர்மட்டம் அதி கரிக்கப் பட்டதை அறிகிறோம். அவ்வாறாயின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? நீர் யாழ்ப்பாணம் வருமா? இல் லையா? அதனைத்தான் பகிரங்கப்படுத்தக் கேட்கிறோம்.

அதேபோன்று கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்துக் கும் எதிர்ப்புக்கள் உள்ளன. அவ்வாறாயின் இவை குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந் துரையாடப்பட்டுள்ளதா? இவ்வாறு எமக்குத் தேவை யான விடயங்களுக்கும் பேசாது வெறுமனே காரணங் களைக் கூறிக் கொண்டிருப்பதால் எமக்கு கிடைக்கவேண் டிய அல்லது வர வேண்டிய திட்டங்கள் எல்லாம் சிதைக் கப்பட்டுக் கொண்டே உள்ளன.

ஆகவே இரணைமடுக் குளத்து நீர்த் திட்டம் மற்றும் கடல்நீரை நன்னீராக்கும் திட்டங்களுக்குப் பொறிமுறை களை வகுக்க வேண்டும். இதனைச் செய்யாது இருப்பது எமது மக்களுக்கு பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்து வதாக அமையும்.

வடக்கு மாகாணத்தில் கரையோரப் பகுதிகளில் உள்ள மீனவக் குடும்பங்களின் நன்மைக்கு வடக்கு மாகாண சபை முன்வைக்கும் திட்டங்கள் என்ன? அவர் கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக் களை நிவர்த்தி செய்வதற்கு மாகாண சபை என்ன செய் துள்ளது?.

முக்கிய துறைமுகங்களைப் புனரமைப்பதற்கு மத் திய அரசு சம்மதம் தெரிவித்தபோதும் அது குறித்து தொடர்ந்து எத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன? இதற்காகவாவது மத்திய அரசுக்கு அழுத் தத்தைக் கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ -7)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை அடுத்தே அவர் அமெரிக்கா சென்றுள்ளார் எனக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்திய கூட்டு எதிரணி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந் திரக் கட்சியுடன் சேர்ந்து தேர்த லில் போட்டியிடவேண்டும் என்பதே கோட்டாபய ராஜ பக்ஷவின் நிலைப்பாடு.

ஆனால், முன்னாள் அமைச் சர் பஸில் ராஜபக்ஷ அந்த நிலைப்பாட்டை ஏற்கவில்லை. ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுடன் இணைய வேண்டிய அவசியம் இல்லையென்று பசில் ராஜபக்ஷ அடித்துக் கூறினார் எனவும், இதனால் இருவருக்கும் இடையே முரண்பாடு கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா பயணமான கோட்டாபய, இரு வாரங்களில் இலங்கை திரும்புவார் என்றும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, அவர் அமெரிக்கா சென்றமை தனிப் பட்ட காரணம் எனவும் மற்றுமொரு தகவல் கூறுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை யிலான சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, கூட்டு எதிரணி தேர்தலில் மாத்திரமல்ல, தொடர்ச்சியாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற நோக் கில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஆனால், அந்தப் பேச்சுக்கள் பஸில் ராஜபக்ஷவின் தலையீட்டால் கைவிடப்பட்டதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. சுதந்திரக் கட்சியுடன் இணைய முடியாது என பஸில் வெளிப்படையாகவே ஊடகங் களுக்குக் கூறியிருந்தார். மஹிந்தவும் இந்த விடயத்தில் மௌனமாக உள்ளார் எனச் செய்திகள் வெளியாகி யிருந்தன.

இந்த நிலையில் கோட்டாபய அமெரிக்கவுக்குச் சென்றமை உள்ளக முரண்பாட்டை எடுத்துக் காட்டுவ தாகவும், அவசரமான அரசியல் முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய தருணத்தில், அவர் நாட்டை விட்டு வெளியே நியமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மனக் காயங்களை ஆற்றுவதாயின் அவற்றை ஆழப்படுத்தாமல் பாருங்கள்!

"யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட (மனக்) காயங்களை ஆற்றுவதற்குப் பல வருடங்கள் எடுக்கும்" - இவ்வாறு கூறியிருக்கின்றார் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

இது உண்மையான - யதார்த்தபூர்வமான - நிதர்சனமான - கூற்று. அதைக் கூறக் கூடிய பக்குவ நிலையில் இருக்கும் தென்னிலங்கைத் தலைவர்கள் ஒரு சிலரில் மங்கள சமரவீரவும் ஒருவர் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

1996க்குப் பின்னர், அப்போதைய சந்திரிகா குமாரதுங்க அரசு யாழ்ப்பாணத்தை மீளப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய கையோடு, சில சமாதான சமிஞ்ஞைகளை வெளிப்படுத்தியமையில் மங்கள சமரவீரவின் பங்கும் முக்கியமாக இருந்தது என்பது தெரிந்ததே.

இலங்கைத் தமிழ் மக்களின் மன ஆன்மாவில் மோசமான காயங்களை ஏற்படுத்திய பல்வேறு சம்பவங்களில் யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பும் மிகமோசமான ஒன்று. ஈழத் தமிழர்களின் வரலாற்றில் அரங்கேறிய பண்பாட்டுப் படுகொலையாக - அழிப்பாக - இடம்பெற்ற கொடூரம் அது.

அந்தக் கொடூரத்துக்குப் பிரயாய்ச்சித்தமாகத் தென்னிலங்கைச் சிங்களவர்களின் நேரடிப் பங்களிப்புடன் 'ஒருபுத்தகமும் ஒரு செங்கல்லும்' என்ற இயக்கத்தை முன்னின்று அப்போதே நடத்தியவர் மங்கள சமரவீர.

இப்போதும் கூட, அண்மைக் காலம் வரை இருந்த நிதி அமைச்சர்களின்றும் மாறுபட்டு வித்தியாசமான வரவு - செலவுத் திட்டம் ஒன்றை அவர் முன்வைத்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புதிய வீடுகளை பல்லாயிரக் கணக்கில் மீள அமைத்துக் கொடுத்தல், முன்னாள் போராளிகளின் மறுவாழ்வு, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவித் திட்ட நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பில் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்மொழிந்த பல திட்டங்கள் இந்த வரவு - செலவுத் திட்டத்துக்குள் முதல் தடவையாக உள்வாங்கப்பட்டிருக்கின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியே சிலாகித்துக் கூறும் அளவுக்கு தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலேயே தமது இனசமரசப் போக்கை பிரதிபலித்திருக்கின்றார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

அத்தகையவர், இனமோதல்களினாலும் முரண்பாடுகளினாலும், யுத்தத்தினாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு நீண்ட காலம் தேவை என்று கூறுவதில் அர்த்தமுண்டு.

ஆனால் அதற்கு அப்பாலும் பல விடயங்கள் இருக்கின்றமையைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகின்றது.

இந்த இனவாத யுத்தத்தில் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனமாகினர். பல்லாயிரம் குடும்பங்கள் தங்கள் உறவுகளை இழந்து தவிக்கின்றன. இன்னும் பல்லாயிரம் குடும்பங்கள் தங்கள் உறவுகள் வலிந்து காணாமலாக்கப்பட்ட நிலையில், அவர்களைத் தேடி அலைந்து துவண்டு கிடக்கின்றன. அதேசமயம், அரசியல் கைதிகள் என்ற பெயரில் ஒரு தொகுதியினர் இன்னும் சிறையில் தொடர்ந்து வாடுகின்றனர்.

தவிரவும், மேலும் பல்லாயிரம் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக பூமி சிங்களப் படைகளால் இன்றும் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் ஏதிலிகளாக அலைகின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், யுத்த காலத்தில் தமக்கு எதிராக அரங்கேறிய அட்டூழியங்கள், அராஜகங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் பொறுப்புக் கூறும் செயற்பாட்டை முன்னெடுக்காமல், அக்கொடூரங்களைப் புரிந்த குற்றவாளிகளைப் பாதுகாத்து, சுதந்திரவீரர்களாகப் பிரகடனப் படுத்தி, காபந்து பண்ணுகின்றது மங்கள சமரவீரவையும் உள்ளடக்கிய நல்லாட்சி அரசும் கூட.

ஆக, யுத்த காலத்தில் ஏற்பட்ட மனக் காயங்கள், வடுக்களை ஆற்றுப்படுத்துவது ஒருபுறமிருக்க, அதேபோன்ற காயங்களை மேலும் மோசமாகத் தீவிரப்படுத்தி, மன வக்கிரங்களை மேலும் ஆழப்படுத்தும் போக்கே இங்கு நடைமுறையில் தொடர்கதையாக நிகழ்கின்றது என்பதை மங்கள சமரவீர போன்றோர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

கொடூர இனவாத யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுப்படுத்துவது குறித்துப் பேசுவதற்கு முன்னர் -

இனவழிப்பு நடவடிக்கைகள், பேரினவாதக் கொடூரங்கள், மேலாதிக்க அராஜகங்கள் எனத் தொடரும் மோசமான செயற்பாடுகளினால் ஏற்கனவே உள்ள மனக் காயங்கள் மேலும் ஆழப்படுத்தப்படுவது குறித்து கவனிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

யுத்தத்தினால் இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும், குரோதங்களும், கசப்புணர்வும், விரோதங்களும் கால ஓட்டத்தில் சீரடையலாம்; சுமுகமடையலாம். ஆனால், அவை மேலும் ஆழப்படுத்தப்படாமல் பேணினால் மட்டுமே அது சாத்தியம்.

ஆனால், அதுதான் இங்கு நடப்பதாக இல்லையே!

மனக் காயங்களை ஆற்றுப்படுத்துவது குறித்துப் பேச முதல் அவற்றை ஆழப்படுத்தாமல் பார்ப்பது குறித்து அமைச்சர் மங்கள சமரவீர போன்றோர் கவனித்தால் நல்லது. அதுதான் ஆற்றுப்படுத்துவதற்கு சாதகமான சூழலைத் தரும்.

## கூட்டு எதிர்க்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு



கொழும்பு, டிசெ.14

தெரணியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அநுர குருப்பு மற்றும் முன்னாள் உப தலைவர் எல். டி விஜேவர்தன ஆகியோர் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இவர்கள் இருவரும் இதுவரை கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்தனர். இதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்களான தெஹியோவிட்ட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தோமஸ் சமிந்த மற்றும் தெரணியகல ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றுச் சபையின் செயலாளர் ஏ.வீ. பியரத்ன ஆகியோர் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அருங்காட்சியகத்தில் விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கி!



கொழும்பு, டிசெ. 14

தமிழ்நாடு காவல்துறையின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கி பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்து வருகிறது என ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கோயம்புத்தூரில் தமிழ்நாடு காவல்துறையின் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு தமிழ்நாடு காவல் துறையினதும், இந்திய இராணுவத்தினதும் பயன்பாட்டில் இருந்த ஆயுதங்கள், தளபாடங்களும், பழங்கால போர்க் கருவிகள் உள்ளிட்டவையும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானுக்கு எதிராக கார்கில் போரின் போது இந்திய இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட டாங்கி ஒன்றும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இங்கு கரையோரக் காவல் படையின் படகுகளும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி ஒன்றும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்காகத் தமிழ்நாட்டில் தயாரிக்கப் பட்டுக் கொண்டிருந்த போது, இந்த நீர்மூழ்கி தமிழ்நாடு காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது.

அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சிறிய நீர்மூழ்கி, பார்வையாளர்களைப் பெரிதும் கவர்கிறது என்றும் ஏ.என்.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

## கூட்டு எதிரணியின் மற்றோர் எம்.பி மைத்திரியின் பக்கம் செல்கிறார்?

மஹிந்த ராஜபக்ஷ ஆதரவுக் கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் தாவவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரே, மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் திரும்பவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்திருக்கின்றன எனவும் கூறப்படுகிறது. விரைவில் அவர் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து ஆதரவு தெரிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே, கூட்டு எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறியாணி விஜே விக்கிரம மற்றும் வீரகுமார திசநாயக்க ஆகியோர் ஜனாதிபதி மைத்திரி தரப்புக்குச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாளை

15.12.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : விசாகம் பி.இ.3.21வரை
திதி : துவாதசி மு.ப.7.21 வரை
சுபநேரம் : 06.21 – 07.51 வரை
இராகுகாலம்: 10.51 – 12.21 வரை

# அதிகாரப்பகிர்வு மாத்திரம் பிரச்சினைக்குத் தீர்வல்ல!



அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 14

அதிகாரப்பகிர்வு மூலமாக மாத்திரம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது ஒரு போதும் சாத்தியமாகாது.

கடந்த கால தவறுகளை திரும்பிப்பார்த்து விடப்பட்ட தவறுகள் அனைத்தும் சரி செய்யப்பட வேண்டும் என தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கிலும், தெற்கிலும் இருந்து நாட்டைப் பிரிக்கும் எந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் அதனை நாம் தடுத்து நாட்டைஒன்றிணைப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிணைத்த மதச் சகவாழ்வு மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநயாக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் மனோ கணேசன் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பௌத்த மாநாயக்க தேரர்கள், இந்து மதத் தலைவர்கள், கிறிஸ்தவ,இஸ்லாமிய மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் சிவில் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் என அனைவரும் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரி ரிபால சிறிசேன சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் ஆட்சியை சரியான பாதையில் கொண்டு செல்ல அரசாங்கமாக நாம் செயற்பட்டு வருகின்றோம். அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம். ஜனாதிபதி தலைமையில் அரச இயந்திரம் செயற்பட்டு வருகின்றது.

எனினும், அதையும் தாண்டி மதத் தலைவர்களின் தலைமைத்துவமும், வழிகாட்டலும் எமக்குத்தேவைப்படுகின்றது. நாம் மத சகவாழ்வு மாநாட்டை நடத்தும் நிலை யில் இதில் முக்கியமான சில விடயங்களை கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

குறிப்பாக, 'அரசியல் அதிகார இலக்கில் ஆயுதம் தூக்கா திருப்போம்', 'இலங்கையர் எம் அடையாளம் பன்மைத்துவம் எம் சக்தி', 'வரலாற்றை திரும்பிப்பார், தவறுகளைத் திருத்திக்கொள்', 'ஒரு நாட்டில் அனைவருக்கும் அதிகாரம்' என்ற பிரதான நான்கு காரணிகளை தொனிப்பொருளாக கொண்டே நாம் எமது பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

இந்த நாட்டின் உரிமைகளை வென்றுகொள்ள வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி இனியொரு போதும் ஆயுதம் ஏந்தக்கூடாது என்பது எமது இலக்காகும். அத்துடன், எமது வரலாற்றை திரும்பிப்பார்த்தால் அதில் தவறுவிட்ட விடயங்களை திருத்திக்கொண்டு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்ற கட்டாயமும் உள்ளது.

மேலும், ஒரே நாட்டுக்குள் அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு முன்நோக்கிச்செல்ல வேண்டும். நாட்டில் பிரிவினை, இனவாதம், ஆயுத மோதல் அனைத்தையும் முடிவுக்கு கொண்டுவந்து அதிகாரங்களை அனைவருக்கும் பகிர்ந்து வழங்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கொழும்பை அடிப்படையாக கொண்டு அதிகாரங்களை குவித்துக்கொண்டு ஆட்சி செய்தது.

இப்போது அதிகாரங்களை பரவலாக்கி ஆட்சி செய்து வருகின்றோம். அதிகாரப் பகிர்வு தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்றால் அது ஒருபோதும் சாத்தியம் ஆகாது. அதை என்னால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. ஜனநாயக நாட்டில் மேற்கூறப்பட்ட நான்கு விடயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் அப்போதே பயணம் இலகுவாகும்.

தேசியக் கோடி, தேசிய அடையாளம், அரசியல் அமைப்பு என்பதை அடிப்படையாக கொண்டே அனைவரும் செயற்படவேண்டும்.

ஜனாதிபதி முதல் பிரதேச சபை உறுப்பினர்கள் வரை இதனை ஏற்றுகொள்ள வேண்டும். எனினும் அண்மையில் வடக்கில் மாகாணசபை உறுப்பினர்ஒருவர்தேசியக்கொடியை ஏற்ற மாட்டேன் என்ற வகையில் செயற்பட்டிருந்தார். இது மிகவும் மோசமான செயற்பாடாகும். நாம் அப்போதே இதனைக் கண்டித்திருந்தேன்.

அதேபோல், தெற்கிலும் சில காலத்திற்கு முன்னர் சிறுபான்மை மக்களின் அடையாளங்களை நீக்கிய தேசிய கொடியாக ஒன்றை ஏந்தியிருந்தனர். இதுவும் கண்டிக்கத்தக்க விடயமாகும். வடக்கிலும்தெற்கிலும்இனவாதத்தை தூண்டும் செயற்பாடுகள் உள்ளன. அரசியல் தீவிரவாதிகள், இனவாதிகள், அடிப்படைவாதிகள் இரு தரப்பிலும் இருந்து செயற்பட்டு வருகின்றனர்.

எனினும், நாம் நடுநிலையாக இருந்து நாட்டைப் பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துவருகின்றோம். இதில் மதத் தலைவர்கள் அனைவரதும் ஆலோசனை, ஒத்துழைப்புகள் எமக்கு அவசியம். இதனையே ஜனாதிபதி தொடர்ச்சியாக எமக்கு வலியுறுத்தி வருகின்றார்.

ஆகவே, அரசின் பயணத்தில் மதத் தலைவர்கள் அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பலமான அரசாங்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்றே நாம் நினைக்கின்றோம்.

வடக்கிலோ தெற்கிலோ நாட்டைப் பிளவுபடுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அதனை நாம் வேடிக்கை பார்க்கப்போவதில்லை. பிரிவினைவாதிகள் எத்தனிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் நாட்டினை ஒன்றிணைக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம். அதில் நாம் அனைவரும் முன்னின்று செயற்படுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியாவில் கட்டுப்பணம்!

வவுனியா, டிசெ. 14

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக வவுனியா மாவட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சைக்கிள் சின்னத்தில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் இந்த கட்சி நேற்றுமுன்தினம் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

அந்த வகையில், கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மயூரன் தலைமையிலான குழுவினரே இந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சைக்கிள்சின்னத்தில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபை, செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடவுள்ளது.

(க)

## அவைத் தலைவரை 'முதல்வர்' என அழைத்த முதலமைச்சர் விக்கி!

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தை வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்'முதலமைச்சர்' என விளித்ததால் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

நேற்றுமுன்தினம் சபையில் வரவு – செலவுத்திட்ட அறிக்கையைச்சமர்ப்பித்து உரையாற்ற ஆரம்பித்த முதலமைச்சர்,'கௌரவ முதலமைச்சர்' என அவைத்தலைவரைப் பார்த்து விளித்ததால் சபையில் அவைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மத்தியில் சிரிப்பொலி எழுந்தது.

இதனையடுத்துச் சுதாகரித்துக் கொண்ட முதலமைச்சர், "நான் எதிர்காலத்தைப் பற்றியே பேசியுள்ளேன்" என்று கூற. "இப்படித்தான் பலரும் பலவற்றைக் கூறி வருகின்றனர்" என்று அவைத்தலைவர் சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

இதன் பின்னர் முதலமைச்சர் அறிக்கையை சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். (ஐ-7)

## தேங்காய் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசிடம் தீர்வுத் திட்டம் எதுவும் கிடையாது!



மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 14

தேங்காய் விலை அதிகரிப்பு தொடர்பில் அரசிடம் தீர்வுத் திட்டங்கள் எவையும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிகரித்துச் செல்லும் தேங்காயின் விலையைக் குறைப்பதற்கு அரசிடம் எவ்வித திட்டமும் கிடையாது.

வெளிநாட்டிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்வதாக கூறுவது என்பது இந்த பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

தென்னந்தோட்டங்களை பிரித்து அதனை தெரிந்தவர்களிடம் வழங்குவதனை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் தேங்காய் இங்கு வரும் போது காய்ந்து விடுகின்றது.

இந்த நிலையில் தேங்காயின் விலை நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றது.

தேங்காயின் விலை தொடர்ந்தும் அதிகரித்தால் மக்கள் சோறும், தேங்காய் சம்பலும் கூட சாப்பிட முடியாத நிலை ஏற்படும்.

தேர்தலை வெற்றிகொள்வது எப்படி என நினைத்து கற்பனைக் கதைகளை விடாது, அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைற் மணல் அகழ்வை நிறுத்தாவிடின் போராட்டம் வெடிக்கும்!





அம்பாறை,டிசெ.14

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும், இவ்வாறு அகழப்படும்போது திருக்கோவில் கரையோரப் பிரதேசம் பெரிய அழிவுகளைச் சந்திக்கும் அபாயம் உள்ளது எனவும் இதனை உடனடியாக அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாது போனால் திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் சுமார் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வீதிகளில் இறங்கிப் பெரிய தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த இல்மனைற் அகழ்வு தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திருக்கோவில் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது பேரழிவில் இருந்து எமது பிரதேசத்தைக் காப்பாற்ற ஒன்றிணைவோம் எனும் துண்டுப் பிரசுரங்களும் ஏற்பாட்டாளர்களால் விநியோகிக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த பொது மக்கள் எமது பூர்வீக வாழ்விடங்கள் மற்றும் இயற்கை வளங்கள் அழிந்து போவதற்கு இங்கு வாழும் மக்களை அகதியாக வேறு இடத்திற்கு மாற்றுவதற்கும் யாருக்கும் இடமளிக்க முடியாது. இது இப்பிரதேசத்தில் வாழுகின்ற ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையுடன் சம்மந்தப்பட்ட விடயம் இதனை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

நாடு பூராகவும் பசுமைப் புரட்சி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் நல்லாட்சி அரசானது திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வின் ஊடாக எமது வரலாற்றுப் பிரதேசத்தை அழித்துச் சூழல் நேயமற்ற நிர்வாணமான பூமியாக மாறும் நிலைக்கு செல்லாது தடுக்க வேண்டும்.

திருக்கோவில் பிரதேசம் கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது கடலோர மணல் அகழ்வு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகள் தொடர்பான ஏற்பாடுகள் முறையாக இல்லாத நிலையில் பெரிய உயிர் அழிவுகளையும், சொத்திழப்புக்களையும் சந்தித்து இன்னும் பூரணமாக மீட்சிபெறாத இந்நிலையில், இவ்வாறான இல்மனைற் அகழ்வுகள் மூலம் மீண்டும் ஒரு பெரிய அழிவுக்கான அத்திபாரங்கள் இடப்படுமானால் இந்தியா தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமாரி மாவட்டத்தின் மணவாளக் குறிச்சியைச் சுற்றி வாழும் மக்களுக்கு ஏற்பட்ட சுழ்நிலைகள் போன்று உருவாகுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தவகையில் இதனை உடனடியாக தடுத்துத் தனது மக்கள் வாழும் பிரதேசத்தை நேயமிக்க சூழலாக பாதுகாக்க அரசு முன்வர வேண்டும். இல்லாது போனால் பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களும் வீதிகளில் இறங்கிப் தொடர் போராட்டங்களை நடத்துவதை விட வேறு வழிகள் இல்லையென்று இந்தக் கூட்டத்தில் ஏகமானதாக முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எஸ்.செல்வராசா மற்றும் வைத்தியர்கள் அரச அதிகாரிகள் ஆகியோரும் பாதிப்பு தொடர்பான கருத்துக்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தியதுடன் சமூக அமைப்புக்கள். பொதுமக்கள் என சுமார் 300இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## மட்டு. மாவட்ட இலக்கிய விழா ஐவருக்கு கலைச்செம்மல் விருது

மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய விழா மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான எம் .உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டக் கலாசார அதிகார சபை மற்றும் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என்.மணிவண்ணன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

2017ஆம் ஆண்டுக்கான கலைச்செம்மல் விருதுகள் திருமதி வல்லிபுரம் மீனாம்பிகை, முருகேசு தம்பிப்பிள்ளை, கணபதி செல்லத்துரை, அலி முகம்மது முஸ்தபா, இராசமாணிக்கம் எதிர்மன்னசிங்கம் ஆகியோருக்கு அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் இலக்கியப் படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன் , மாவட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை மாவட்ட கலாசார அதிகார சபையினால் நடத்தப்பட்ட குறும் திரைப்படப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பாடுமீன் விருதும் வழங்கப்பட்டது.

இதில் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் , ஆசிரியர்கள் கலை, இலக்கிய படைப்பாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## திருகோணமலையில் அரச நத்தார் விழா

2017ஆம் ஆண்டுக்கான அரச நத்தார் விழா இம்முறை திருகோணமலையில் கொண்டாடப்படவுள்ளது.

நாளைமறுதினம் 16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் கோலாகலமாக நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், அரச அதி




காரிகள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

## உலகின் சிறந்த நிர்மாணங்களில் ஒன்றாக மட்டக்களப்புக் கட்டடம்!





உலகின்சிறந்தகட்டடங்களில் ஒன்றாக இலங்கையிலுள்ள கட்டடமும் தெரிவாகியுள்ளது. பிரித்தானிய நிறுவனம் ஒன்றினால் 2018ஆம் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த கட்டடங்களின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

RIBA(Royal Institute of British Architects) என்ற நிறுவனத்தால் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் உலகம் முழுவதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட கட்டடங்கள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தப் பட்டியலில் இலங்கைக் கட்டடம் ஒன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கிரான் பகுதியில் அமைந்துள்ள லங்கா லேனிங் சென்டர் என்ற கட்டடமே இவ்வாறு சிறந்த கட்டடங்களில் இணைந்துள்ளது.

எதிர்காலத்தில் சிறந்த எதிர்காலம் ஒன்றை உருவாக்குதல் என்ற தொனிப்பொருளின் இக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இங்கு கல்வி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளின் றிப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மத, இன வேறுபாடுகள் இன்றிச் சகலரும் பயன்பெற முடியும்.

இக் கட்டடம் இயற்கையை முழுமையாகப் பாதுகாத்து மிகவும் குறைந்த செலவில் நிறைவு செய்யப்பட்ட கட்டடமாகும்.

இந்தக் கட்டடம் உலகளாவிய ரீதியில் பெயரிடப்பட்டுள்ளமை இலங்கைக்கு கிடைத்த கௌரவமாகப் பார்க்கப்படுகிறது. (ப)

# மஹிந்தவின் தனித்த பயணம் ஒருபோதும் வெற்றியளிக்காது!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 14

கட்சியில் இருந்து தனித்து செயற்படும் சகல தரப்பினரும் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து கொள்ளுங்கள்.

தனித்த பயணம் ஒருபோதும் சாத்தியமாகாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தனித்த பயணம் அவரது வீழ்ச்சிக்கே வித்திடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகச் செயற்பட அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போதுமே மக்களின் பலத்தில் இயங்கும் கட்சியாகும். யார் தலைமை பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் கட்சி பலமாக நகரும். அதில் சந்தேகம் இல்லை.

எனினும், கட்சிக்குள் இன்று சுதந்திரமும் சகல உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் தன்மையும் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் மாத்திரம் ஆதிக்கம் செலுத்தும் தன்மையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, கட்சியை மேலும் பலப்படுத்த இப்போது எம் அனைவருக்கும் சிறந்த வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே, எம்மில் இருந்து பிரிந்து செயற்படும் நபர்கள் மீண்டும் எம்முடன் கைகோத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்த வேண்டும். அதற்கான திறந்த அழைப்பை நாம் விடுத்துள்ளோம்.

இப்போது பொது எதிரணியின் சிலர் எம்முடன் கைகோத்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பலம் என்னவென்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.

அதேபோல் மேலும் பலர் எம்முடன் விரைவில் இணையவும் உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கும் நபர்கள் கொள்கையை ஆதரிக்கும் நபர்கள் எப்போதும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும். பிரிந்து செல்லக்கூடாது.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து தனித்து உள்ள நபர்கள் மீண்டும் எம்முடன் இணையுங்கள். நாம் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வோம்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து தன்னை மக்கள் மத்தியில் பலப்படுத்திக் கொண்டவர்.

ஆகவே, அவர் தொடர்ந்தும் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும். மாறாக தனித்து களமிறங்கி ஒரு போதும் அவரால் ஆதிக்கம் செலுத்த முடியாது. மக்கள் கட்சியையும் கொள்கையையும் நேசித்து கட்சிக்கே முன்னுரிமை கொடுக்கின்றனர்.

ஆகவே, தனித்து பயணித்து பயன் ஏதும் இல்லை. அனைவரும் மீண்டும் எம்முடன் கைகோருங்கள். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது பலம் நிரூபிக்கப்படும்.

அதன் பின்னர் மக்கள் யாருடன் உள்ளனர் என்ற உண்மைகள் தெரியவரும். எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நேசிக்கும் உறுப்பினர்களை நாம் ஒருபோதும் நிராகரிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'ஈ சுவாபிமானி' தங்க விருது ஜனாதிபதியிடம் கையளிப்பு!

மக்களின் பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதியிடம் தெரிவித்து தீர்வுகளைப் பெற்றுக்கொள் வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 'ஜனாதிபதியிடம் தெரிவிக்க' நிகழ்ச் சித்திட்டத்திற்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற 'ஈ சுவாபிமானி' தங்க விருது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் தொலைத்தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் வசந்த தேசப் பிரியவால் இந்த விருது ஜனாதிபதியிடம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத்தை மக்கள் சேவைக்காக உச்ச அளவில் பயன்படுத்தியதை பாராட்டி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தால் 'ஜனாதிபதியிடம் தெரிவிக்க' நிகழ்ச்சித்திட்டத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'ஜனாதிபதியிடம் தெரிவிக்க' நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அரசசேவைவழங்கல்செயல்முறையை பலப்படுத்தி மக்களின் பிரச்சினைகள், மனக்குறைகள் மற்றும் கருத்துக்கள், முன்மொழிவு களை ஜனாதிபதியிடம் தெரிவிப்பதுடன், அவற்றுக்கு துரிதமாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற் கும் வசதியளிப்பது இதன் நோக்க மாகும்.

பொது மக்களுக்கு 1919 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அரச தகவல் மையத்துடன் தொடர்புகொண்டு அல்லது இணையத்தளம், மின்னஞ்சல், தபால் ஆகிய வழிகளினூடாக ஜனாதிபதி அலுவலகத்திற்கு தமது முறைப்பாடுகள், மனக்குறைகள் அல்லது கருத்துக்களை முன் வைப்பதற் கான சந்தர்ப்பம் 'ஜனாதிபதியி டம் தெரிவிக்க' நிகழச்சித் திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

(க)

## ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்தார் இந்திய விமானப்படைத் தளபதி!



கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ, நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நான்கு நாள்கள் பயணமாக கடந்த 10 ஆம் திகதி இலங்கை வந்த இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரேந்தர் சிங் டனோ, கடந்த திங்கட் கிழமை இலங்கையின் பிரதமர் மற்றும் பாதுகாப்பு உயர் மட்டத் தினருடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

நேற்று முன்தினம் இந்திய விமானப்படைத் தளபதி ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை அவரது வதிவிடத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜயம்பதி மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(க)

## மாணவியின் திறமையைப் பாராட்டி ஜனாதிபதி பரிசு!



கொழும்பு, டிசெ. 14

கெக்கிராவை திப்பட்டு வெள பிரதேசத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற தேசிய ஏர் பூட்டு விழாவில் கெக்கிராவை மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் 09 இல் கல்வி கற்கும் ஆர்.எம்.தெவ்மினி இந்ரநாத மாணவியால் ஆக்கப்பட்ட கவிதை நூல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மாணவியை நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அழைத்த ஜனாதிபதி, அந்த மாணவியின் எதிர்கால கல்வி நடவடிக்கைக்காக பணப் பரிசிலை வழங்கினார்.

# கிளிநொச்சியில் கட்டுப்பணம் செலுத்தியது மஹிந்தவின் கட்சி

கிளிநொச்சி, டிசெ. 14

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தியது.

வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம் ரஞ்சித் சமரக்கோன் தலைமையில் கரைச்சி பிரதேச சபைக்கே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த எஸ்.எம் ரஞ்சித், ''கரைச்சிப் பிரதேச சபைக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு பிரதேச சபைகளுக்கும் விரைவில் கட்டுப்பணம் செலுத்தப்படும்'' என்றார். (ஐ)

## தினசரி ராசி பலன் 14.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 29ஆம் நாள் வியாழக்கிழமை துவாதசித்திதி பி.இ.5.03 மணி வரை பின்னர் யோதசி நட்சத்திரம் - சுவாதி இரவு 11.04 மணி வரை பின்னர் விசாகம் அமிர்தயோகம் இரவு 11.04 மணி வரை பின்னர் சுப யோகம்*

**ராகுகாலம்** - *பகல் 01.32 மணி முதல் 02.58 மணி வரை*

**சுபநேரம்** -*காலை 07.57 மணி முதல் 09.26 மணி வரை*

**திவசம்செய்யவேண்டியதிதி**- *கார்த்திகை மாத தேய்பிறை துவாதசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ஆயிலியம்*

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். தொழிலில் மந்தநிலை உண்டாகும். வேலைக்காக காத்திருப்போருக்கு வேலை தாமதமாகும்.

**ரிஷபம் :** மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாக புழங்கும். குடும்பத்தில் அளவற்ற மகிழ்ச்சி காணப்படும். பிரிந்திருந்த உறவினர்களள் மீண்டும் இணைவார்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம் :** உயர்வான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு மேலோங்கும். வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி ஊட்டும் வகையில் வியாபாரம் நன்றாக நடைபெற்று வரும்.

**கடகம் :** சஞ்சலமான நாள் பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்பநிலை ஏற்படும். உறவினர்களுடன் பகைக்க நேரும். தொழிலில் கடின உழைப்பால் உடலாரோக்கியம் பாதிப்புறும்.

**சிம்மம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும்.

**கன்னி :** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப உறவு சுமாராக இருக்கும். பணிபுரியும் தொழிலில் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டி இருந்தாலும் நன்மை பெறுவார்கள்.

**துலாம் :** மேன்மையான நாள் பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரத்தில் இனிமையாகப் பேசி தொழிலில் விருத்தி செய்து கொள்வார்கள்.

**விருச்சிகம் :** குழப்பமான நாள். மனஉழைச்சல் மனக் கவலை அதிகரிக்கும். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் பல நெருக்கடி உண்டாகும்.

**தனுசு :** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். உத்தியோகத்தர்கள் தங்கள் சேவையாலும் திறமையாலும் உயர்வு பெறுவார்கள்.

**மகரம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை தாமதத்தை கொடுக்கும். உடலாரோக்கியம் பாதிப்படைந்து மருத்துவ செலவுகள் உண்டாகும்.

**கும்பம் :** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபாரம் துரிதகதியில் நடைபெறும். உத்தியோகத்தர்கள் கோரிக்கை நிறைவேறும்.

**மீனம் :** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். உத்தியோகத்தில் கவனக் குறைவு உண்டாகும். அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு புதிய தலைவரானார் சித்தி மொஹமட் பாரூக்!



கொழும்பு, டிசெ. 14

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக சித்தி மொஹமட் பாரூக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சித்தி மொஹமட் பாரூக் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் ஹொங்கொங் பல்கலைக் கழகத்தின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான பட்டதாரியுமாவார்.

நடமாடும் தொலைத்தொடர்பு துறையில் நிபுணத்துவம் கொண்ட இவர் இலங்கையின் முன்னணி நிறுவனமான Panasian Power PLC நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியாக 2009 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வந்தார்.

மேலும், அவர் சகவாழ்விற்காக அயராது பாடுபட்ட சிவில் செயற்பாட்டாளருமாவார். 2017 ஆம் அண்டு ஜூன் மாதத்திலிருந்து சித்தி மொஹமட் பாரூக் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும் கடமை புரிந்தார்.

மறைந்த எஸ்.எம். பாரூக்கின் புதல்வரான அவர் முன்னால் மாகாண சபை உறுப்பினருமாவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மஹிந்த மீது இனி நம்பிக்கையில்லை

## குணதாஸ அமரசேகர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

புதிய அரசமைப்புக்கு எதிராகக் குரல்கொடுப்பார் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அணியினர் மீது இருந்த நம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டதாக தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

ரணில் – மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசு கொண்டு வர முயற்சிக்கும் புதிய அரசமைப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கலாநிதி குணதாஸ அமரசேகர தலைமையிலான தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

புதிய அரசமைப்புக்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் போர்க்கொடி உயர்த்தியிருந்த நிலையில், அதன் மீதான எதிர்ப்பலைகள் அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றதால் குறைவடைந்துவிட்டன.

இந்த நிலையில் இந்த எதிர்ப்பலைகளை மீண்டும் ஆரம்பிக்கும்படி தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும், மஹிந்த ராஜபக்ஷவும் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு எதிரான சர்வஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்திக்கொண்டு எதிர்வாக்கு அளிக்க வேண்டும் என்பதை மக்களுக்கு வலியுறுத்தவேண்டும். ஆனால் ஒன்றிணைந்த எதிரணியும், மஹிந்த ராஜபக்ஷவும் நேரடியாக இன்னும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்று நாங்கள் நம்பமாட்டோம். மாறாக அவர்கள் வாழ்க்கைச் செலவு பற்றியே பேசிவருகிறார்கள்.

இவர்கள் மீது எதிர்பார்ப்பை வைக்காமல் விசேடமாக இதனை மகாநாயக்க தேரர்களே கையில் எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். புதிய அரசமைப்பு பற்றி அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் அவ்வப்போது எதிர்ப்பு தெரிவித்து வந்திருந்தாலும் உண்மையிலேயே இதனை எதிர்த்தவர்கள் மகாநாயக்க தேரர்களாவர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கே மகாநாயக்கர்கள் வலியுறுத்தியிருந்தார்கள். எனவே மீண்டும் புதிய அரசமைப்புக்கு எதிரான முயற்சியை ஆரம்பிக்குமாறு மகாநாயக்க தேரர்களிடம் நாங்கள் தாழ்வுடன் கேட்டுக் கொள்கின்றோம் – என்றார். (ஐ)

# மகேஸ்வரன் படுகொலை வழக்கின் மேன்முறையீட்டு விசாரணை 2018 இல்!

கொழும்பு, டிசெ.14

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலை தொடர்பான மேன்முறையீட்டு வழக்கில் குற்றவாளி சார்பிலும், மனுதாரர் சார்பிலும் எழுத்துமூல சமர்ப்பணத்துக்கான திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சரான அமரர் ரி.மகேஸ்வரன் படுகொலை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு முன்பாக சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தப் படுகொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்ட வசந்தன் என்பவருக்கு 2012ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே மனுதாரருக்கு தனது ஆட்சேபனை மற்றும் எழுத்துமூல சமர்ப்பணத்தை அளிப்பதற்கு எதிர்வரும் வருடம் மார்ச் மாதம் 28ஆம் திகதி குறிப்பிடப்பட்டது.

அத்தோடு குற்றவாளி சார்பில் எழுத்துமூலச் சமர்ப்பணத்தை முன்வைப்பதற்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டது.

இந்த எழுத்துமூல சமர்ப்பணங்கள் அடுத்த வருடம் ஜூன் மாதம் 22ஆம் திகதி விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்ப்புக்கு திகதி குறிக்கப்படும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

# வேலையற்றோர் வீதம், வறுமை இரண்டிலும் வடக்கு மோசநிலை!

**வடக்கு மாகாண நிதி அமைச்சர் என்ற முறையில் தற்போதைய மாகாண சபையின் ஐந்தாவது - கடைசி - வரவு செலவுத் திட்ட அறிமுக உரையை நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பித்தார் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் அந்த உரையின் முதல் பகுதி நேற்றுப் பிரசுரமாகியிருந்தது. இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது. எஞ்சிய பகுதி நாளை பிரசுரமாகும்.**



## வரவு—செலவுத் திட்ட அறிமுக உரையில் முதல்வர் விசனம்

தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக 2017 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு ஆண்டாகவும் 2018 ஆம் ஆண்டு தேசிய உணவு உற்பத்தி வருடமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தினூடாக அரச, தனியார்துறைகளில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் வருமான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல், மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கக்கூடிய வகையிலான பெறுமதிசேர் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளூடாக வருமானத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் கிராமிய சமூகப் பொருளாதார உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எமது மாகாணம் அதிகரித்த பங்களிப்பை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திக்கான இலக்குகள் துறைசார் ரீதியாக இனங்காணப்பட்டுள்ளன. எமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டு முழுநாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்பதிலே நாம் கண்ணுங் கருத்துமாக உள்ளோம்.

ஆனால் 2016 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த வேலையற்றோர் தொகை 4.4 சதவிகிதமாகக் காணப்படுகையில் வடமா காணம் ஏனைய மாகாணங்களோடு ஒப் பிடுமிடத்து ஆகக் கூடுதலான வேலையற்றோர் தொகையாக 6.3 சதவிகிதத்தைப் பதிவுசெய்துள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். மேலும் இலங்கையின் வறுமைநிலையை நோக்கும் போது தலைக்குரிய வறுமைச் சுட்டி 4.1 விகிதமாகக் காணப்பட்ட போதும் வடமாகாணத்திற்கான தலைக்குரிய வறுமைச்சுட்டி ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடப்படுமிடத்து ஆகக் கூடுதலான வறுமைச்சுட்டி 7.7 சதவிகிதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் வறுமை நிலையை நோக்கும் போது 2016ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் வறுமை அதிகூடிய மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் அதாவது 18.2சதவிகித வறுமைக் குறிகாட்டியை பதிவு செய்து முதலாவது நிலையிலும் முல்லைத்தீவு மாவட்டம் 12.7 விகிதம் பதிவு செய்து இரண்டாவது நிலையிலும் யாழ்ப்பாண மாவட்டம் 7.7சதவிகிதத்தைப் பதிவு செய்து 5ஆவது இடத்திலும் காணப்படுகின்றன. வறுமை கூடிய மாவட்டமாக இருந்த முல்லைத்தீவு வறுமையின் தாக்கம் குறைவடைந்து எமது காலத்தில் இரண்டாம் இடத்திற்குப் பின்னேறியமை வரவேற்கத்தக்கது. எனினும் கிளிநொச்சி மாவட்டம் கூடிய கவனிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எனவே வட மாகாணத்தின் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடியதாக அரச தனியார் கூட்டு முதலீடுகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதும், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கூடாக மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதும் இந்த வரவு - செலவுத் திட்டத்தினூடாக அடையப்படவேண்டிய இலக்குகளாக உள்ளன.

வடமாகாணம் தனது உள்ளக வள வாய்ப்புக்கள் ஊடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், மக்களுக்கான வருமான மட்டத்தை அதிகரிக்கச் செய்தல், கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல், மாகாண மட்டத்தில் உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சிறிய நடுத்தர விவசாயிகள் மற்றும் முயற்சியாளர்களுக்குப் புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி ஊக்குவித்தல், சிறிய நடுத்தர முயற்சியாளர்களது திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவித்தல், வறுமைத் தணிப்பு திட்டங்களை அமுலாக்குதல், போதைப்பொருள்களின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சிறுநீரக நோய்த்தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல், போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றது. மற்றும் மனித வள மேம்பாட்டை நோக்காகக்கொண்டு கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு பொருத்தமான அபிவிருத்தித்திட்டங்கள் போன்ற முக்கியமான விடயங்களில் 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கவனம் செலுத்த முனைந்துள்ளது.

மேலும் 70ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளையும் (SDG)கவனத்திற்கொண்டு எமது அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் பயணிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். மத்திய அரசாங்கமும் அதற்கு அனுசரணையாகச் செயற்பட முன்வரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

வடமாகாணத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதி மிக்கனவாகவும், வினைத்திறனுடையனவாகவும் செயற்படுத்துவதற்கு ஆளணிகள் இன்றியமையாதவையாகும். வடமாகாணத்திற்குத் தேவைப்படும் ஆளணிகள் தொடர்பாக சேவைப்பிரமாணக் குறிப்புக்களைத் தயாரித்து மாகாண சபைக்குட்பட்ட வெற்றிடங்களை முறையே நிரப்புவதும் இன்றியமையாததாகும். அந்த வகையில் அடையாளப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் பல்வேறு பதவிநிலைகளிலும் நிரப்பப்பட்டுள்ளன. இதேவேளை மத்திய அரசின் கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை உள்ளது. எனவே 2018ஆம் ஆண்டு மத்திய, மாகாண அரசுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது இன்றியமையாததாகும்.

### விவசாயத் துறை

வடமாகாணத்தின் முக்கிய துறைகளை கவனத்திற்கொள்ளும் போது விவசாயத்துறையில் நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் பழமரச் செய்கை ஆகியவற்றில் அதிகளவு வெளியீட்டுத் தன்மையை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தரமான உயர்ந்த இனவிதை வகைகள், நவீன தொழிநுட்ப வசதிகள், காலத்தின் தேவைக்கேற்ப விவசாயிகள், விவசாயத்துறை அலுவலர்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளின் விருத்தி ஆகியவற்றின் மூலம் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

அத்துடன் உவர் நிலங்களில் நெற்செய்கையை ஊக்குவித்தல், நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், சேதன நெற்செய்கையை ஊக்குவித்தல் மற்றும் தரமான விதை நெல் உற்பத்தி ஆகிய செயற்பாடுகளும் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு உதவியளித்துள்ளன. இவற்றை விட வீட்டுத் தோட்ட செயல்திட்டத்தின் மூலம் வறிய விவசாயக் குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு செயற்றிட்டங்களும் அமுலாக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் பல்வேறு நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

2018ஆம் ஆண்டு தேசிய உணவு உற்பத்தி வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டதற்கமைவாகப் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் உள்வாங்கி உற்பத்தி அதிகரிப்பினூடாக விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கூடுதலான பங்களிப்பை வடமாகாணத்தின் விவசாயத்துறை செலுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

### கால்நடை அபிவிருத்தித் துறை

வடக்கு மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தியை பொறுத்தளவில் 2017 மிகவும் அதிக வளர்ச்சியை அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. கிராம மட்ட மக்களால் அதிகம் விரும்பப்படும் வாழ்வாதார துறையாக கால்நடை உற்பத்தித்துறை உருவாகிவருகின்றது. முக்கியமாக இத்துறை 2017 இல் காணப்பட்ட வரட்சி நிலைமையிலும் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. குறிப்பாக 2016ஆம் ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டின் நாளாந்த பாலுற்பத்தி ஏறத்தாழ 25ஆயிரம் லீற்றர்களினால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பால் விற்பனை மூலமாக மட்டும் ரூபா 2,45 கோடி ரூபா வருவாய் பண்ணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண இலக்குகளாக நாளொன்றுக்கு பாலுற்பத்தி ஒரு லட்சத்து 30ஆயிரம் லீற்றர்களா கவும், முட்டை உற்பத்தியினை ஒரு லட்சம் முட்டைகளாகவும் இறைச்சி உற்பத்தியை 35ஆயிரம் கி.கி ஆகவும் உயர்த்தும் முகமாகப் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு கால்நடை உற்பத்திகள் மூலமான பண்ணையாளர்களின் வருவாயை மேலும் 15 சதவிகிதம் அதிகரிப்பதற்கு ஏதுவாக கால்நடை உற்பத்திகளை இறக்குமதி செய்வதை இயன்றளவுக்கு குறைத்துக்கொள்ளும் வகையிலும் அதிகளவில் வர்த்தக ரீதியிலான கால்நடை பண்ணைகளை உருவாக்கும் வகையிலும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

### நீர்ப்பாசனத் துறை

விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை இவ்விடத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது. வடமாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 45 நடுத்தர நீர்ப்பாசன குளங்களும் 09 பெரிய நீர்ப்பாசன குளங்களுமாக 70,181 ஏக்கர் கொண்டமை 54 நீர்ப்பாசன குளங்களும் 20ஆயிரம் ஏக்கர் கொண்ட உப் பாறு, ஆனைபிறவு, மற்றும் வடமராட்சி ஆகிய 3 நன்னீர் ஏரித் திட்டங்களும் 34 உவர்நீர்த்தடுப்பு அணைகளும் (7,220 ஏக்கர் கொண்டது) மற்றும் 2ஆயிரம் ஏக்கர் கொண்ட வழுக்கையாறுத் திட்டமுமாக அனைத்துத் திட்டங்களும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டில் உள்ளூர் நிதியீட்டத்தின் ஊடாகவும் வெளிநாட்டு நிதியீட்டத்தினூடாகவும் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு விவசாயப் பயிர் பரவலாக்கம், உற்பத்தி விரிவாக்கம் மற்றும் விலங்கு வேளாண்மை அபிவிருத்தி என்பன மேம்படுத்தப்பட்டு விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனத்திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திட்டம், வடமராட்சி நீரேரியை நன்னீர் ஏரியாக மாற்றுந் திட்டம், தொண்டைமானாறு தடுப்பணை போன்றவையும் விவசாய மற்றும் கால்நடைத்துறைகளை மேம்படுத்துவதற்கான சிறப்பான திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலத்திலும் இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

### கல்வித் துறை

வடமாகாணத்தில் கல்வித் துறையை நோக்கும் போது பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகள், நவீன தொழிநுட்ப வசதிகளை உட்புகுத்தல், தளவாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கல்வித்துறை சார் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றமையுடன் குறிப்பிடத்தக்களவில் ஆசிரியர் பற்றாக்குறையும் வருடாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

எனி னும், வடமாகாணத்தின் கல்வி நிலையை ஏனைய மாகாணங்களுடன் ஒப்படும் போது அதிக கவனம்செலுத்த வேண்டிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளைத் தற்போது எடுத்து வருகின்றோம்.

(மிகுதி நாளை)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

ஒரு பலமான ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சர்வதேச ஆலோசகர்களும் மகா கூட்டணிக்கு அழைப்பு விடுக்கின்றனர். பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், CDU/CSU, சுதந்திர ஜனநாயகவாதிகள் மற்றும் பசுமைக் கட்சியினருக்கு இடையே கூட்டணி பேச்சுகள் தோல்வி



யடைந்ததும் உடனடியாக சான்சிலர் மேர்க்கெலை அழைத்து, 'நாம் தான் முன்னெடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார். பேர்லினில் ஒரு நெருக்கடியை பிரான்ஸ் விரும்பவில்லை என்பதையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

பைனான்ஸியல் டைம்ஸ், ஜேர்மனியை 'இன்றியமையாத நாடாக' வர்ணிக்கும் அளவுக்குச் சென்றது.

ஜேர்மனி 'திடமாகவும் எதிர்பார்ப்புக்கு இணங்கவும்' இல்லையென்றால் ஒட்டுமொத்த ஐரோப்பிய திட்டமும் தொந்தரவுக்கு உள்ளாகும் என்று கிடியோன் ராஹ்மான் எழுதினார்.

ஸ்ரைன்மையர் பொதுவான பதவியில் இருப்பதால் அவருடைய கட்சி உறுப்பினர் அந்தஸ்தே காலாவதியாகி இருக்கும் நிலையில், ஸ்ரைன்மையரைத் தவிர்த்து, SPD, வெளியுறவுத்துறை அமைச்சர் சிக்மார் காப்ரியேல் மற்றும் ஹம்பேர்க்கின் வலது சாரி நகர முதல்வர் Olaf Scholz ஆகியோர் ஒரு மகா கூட்டணிக்கான பிரதான ஆலோசகர்களாக உள்ளனர்.

ஸ்ரைன்மையரும் காப்ரியேலும் ஜேர்மன் ஏகாதிபத்தியம் இராணுவ வாதத்திற்குத் திரும்புவதற்கு வழி வகுத்தவர்கள். 2014 இல், அப்போது வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த ஸ்ரைன்மையர் 'இராணுவ கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன என அறிவித்ததுடன், உக்ரேனின் கியே வில் ஒரு ரஷ்ய-விரோத செல்வந்த ரின் ஆட்சியை அதிகாரத்திற்கு கொண்டு வந்த ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் மிக முக்கிய பாத்திரம் வகித்தார். காப்ரியேல், அமெரிக்காவைச் சார்ந்திருப்பதிலிருந்து விடுதலை பெற்ற ஒரு சுதந்திரமான ஐரோப்பிய இராணுவம் மற்றும் வெளியுறவு கொள்கைக்காக ஓய்வின்றி பிரசாரம் செய்துள்ளார்.



**பேர்லினில் நடத்தப்பட்ட ஒரு பாதுகாப்புக் கருத்தரங்கில், ஜேர்மன் இராணுவத் தளபதிகள் புதிதாக நிறுவப்படும் ஒரு மகா கூட்டணியிடம் இருந்து அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிவித்தனர்: 1930 களில் ஜேர்மன் இராணுவத்தை (Wehrmacht) மீள்ஆயுதமயப்படுத்தியதை நினைவூட்டும் வகையில் ஒரு மீள்ஆயுதமயமாக்கல் வேலைத்திட்டத்தை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.**

தொழில் வழங்குநர்களின் கருத்தரங்கம் ஒரு மகா கூட்டணிக்கு அழைப்புவிடுப்பதற்கு இதுதான் காரணம். பிரதான பெருநிறுவனங்கள் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக ஒரு புதிய தாக்குதலைத் தொடுக்கத் தயாராக உள்ளன. சிமென்ஸ், ஏர் பேர்லின் மற்றும் Thyssen Krupp ஆகியவை வழமையான சமூகப் பாதுகாப்பு வலையத்திலிருந்து வெளியேற்றி, தற்போது ஆயிரக் கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியுள்ளது.

ஆனால், மகா கூட்டணியை அறிவுறுத்துபவர்களுக்கு ஒரு பிரச்சினை உள்ளது. இதுபோன்றவொரு கூட்டணி மக்களிடையே ஆழமாக மதிப்பிழந்துள்ளது. INSA கருத்துக் கணிப்புகளின்படி, அதுபோன்ற ஒரு கூட்டணியை வாக்காளர்களில் வெறும் 22 சதவீதத்தினர் மட்டுமே ஆதரிக்கின்றனர். கூட்டாட்சி தேர்தலில், CDU, CSU மற்றும் SPD உம் வாக்குகளில் கூட்டாக 14 சதவீத புள்ளிகளை இழந்து, வெறும் 53 சதவீத ஆதரவைப் பெற்றன. வாக்களிக்காதவர்களையும் சேர்த்து பார்த்தால், அவை வாக்காளர்களில் வெறும் 40 சதவீதத்தினரின் ஆதரவையே பெற்றன. 20.5 சதவீத வாக்குகளுடன், சமூக ஜனநாயகக் கட்சி 1998 இல் அது பெற்ற வாக்குகளில் வெறும் பாதியளவையே பெற்றது. அப்போது அது 16 ஆண்டுகள் எதிர்கட்சியாக இருந்த பின்னர் அரசு அமைக்க திரும்பி இருந்தது.



**சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் மார்ட்டின் சூல்ஸ் SPD இளைஞர் இயக்கத்தின் (Jusos) கூட்டாட்சி சபையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது, கிரேக்க பிரதம மந்திரி அலெக்சிஸ் சிப்ராஸ் அவருக்கு ஒரு சேதி அனுப்பினார். மகா கூட்டணியை Jusos எதிர்க்கின்ற நிலையில், ஒரு மகா கூட்டணியை அறிவுறுத்துமாறு சூல்ஸுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.**




உள்நாட்டு கொள்கையில், சமூக ஜனநாயகக் கட்சியும் சமூக மற்றும் அரசியல் எதிர்ப்பை ஒடுக்கும் பாதைக்குத்தலைமை அளித்துள்ளது. தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன், இவற்றுடன் கட்சி நெருக்கமான உறவுகளை அனுபவித்து வரும் நிலையில், வேலைநீக்கங்கள் மற்றும் சமூக செலவின வெட்டுக்களுக்கு தொழிலாள வர்க்கத்தின் சகல எதிர்ப்பையும் மூச்சடைக்க செய்துள்ளது.

நீதித்துறை அமைச்சர் ஹெய்கோ மாஸ் (SPD), ஏனைய விடயங்களோடு சேர்ந்து, வலையமைப்பு அமலாக்க சட்டத்திற்குப் பொறுப்பாளி ஆவார். இது சமூக ஊடகங்கள் மீது கடுமையான தணிக்கையைத் திணிக்கிறது. இவர் ஜனநாயகக் கொள்கை மீது ஒரு கடுமையான போக்கு கொண்டுள்ள CDU உள்துறை அமைச்சர் தோமஸ் டு மஸியருடன் நெருக்கமாகச் செயற்படுகிறார்.



(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமா கின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 35

### குருநாதரின் நிறைவுப்பயணம் 1983 பெப்ரவரி

குருநாதர் 1983 பெப்ரவரியில் மீண்டும் வந்தார். அவரது இப்பயணத் தின்போது நான்கு கம்பன் விழாக்களை நடத்தினோம். முதல்விழா வடமராட்சி யிலும், இரண்டாவதுவிழா திருகோண மலையிலும் மூன்றாவது விழா இணு விலிலும் நான்காவது விழா யாழ்ப்பா ணத்திலுமாக நடைபெற்றன. இந்தப் பயணம் ஈழத்திற்கான குருநாதரது இறுதிப்பயணமாயிற்று. குருநாதரை தலைமன்னாரில் இருந்து அழைத்து வர ஒரு காரில்லாது தவித்தோம். முன்பு கார் தந்துதவிய வங்கி முகாமை யாளர் வைத்தியநாதன், இம்முறை எமக்கு உதவுவதில் சற்றுப் பின் வாங்கி யிருந்தார். எங்களோடு சிறு மனஸ் தாபம் அவருக்கு. செத்த வீட்டில் திரு வாசகம் பாடக்கூடாது என்று பேரா சிரியர் கைலாசநாதக்குருக்கள் அவர் கள், 'ஈழநாடு' பத்திரிகையில் ஒரு விவாதத்தை ஆரம்பித்து வைக்க, பாட லாம் எனப் பலரும் அவரை எதிர்த்து எழுதினர். நானும் பாடலாம் என அவரை எதிர்த்துக் கட்டுரை வரைந்தேன். கைலாசநாதக்குருக்களின் மேல் வைத் தியநாதன் பெரிய மதிப்பு வைத்திருந் தார். நான் குருக்கள் அவர்களை எதிர்த்து எழுதியதில், வைத்தியநாதனுக்கு அவர்களுக்கு எங்கள் மீது சற்று மனக் கசப்பு. அதனால் குருநாதரை அழைத்து வர காரொன்றை ஒழுங்கு செய்து தருமாறு நாங்கள் கேட்க, ''பஸ்ஸில் அழைத்து வாருங்களேன்'' என்றார். ஒன்றும் பேசாமல் திரும்பிவிட்டோம். என்ன செய்வதென்று தெரியவில்லை. யாழ். நாடாளுமன்ற உறுப்பினராயி ருந்த, யோகேஸ்வரன் எம்.பியிடம் சென்றோம். எங்களை அவர் ஓரளவு தெரிந்து வைத்திருந்தார். எங்கள் பிரச் சினையைச்சொன்னதும், பேராசிரியரை அழைத்துவர யாரிடமோ ஒரு கார் வாங்கித் தந்தார். அதிற்தான் அந்த முறை குருநாதரை அழைத்து வந்தோம்.

★★★

### எமக்காய் இடர்கள் தாங்கிய குருநாதர்

இம்முறை குருநாதர் எங்கள் இரண் டாவது அலுவலகத்தில்தான் தங்கியி ருந்தார். எந்த வசதியுமில்லாத, ஓர் அறை மட்டுமே உள்ள அலுவலகம் அது. குருநாதர் கட்டிலில் படுத்திருக்க, நாங்கள் சுற்றிவர நிலத்திற் படுத்திருப் போம். ஒரு கோழிக்கூட்டின் ஊடாகத் தான் கழிவறைக்குச் செல்ல வேண்டும். எத்தனையோ பணக்காரர்கள், குருநா தரைத் தங்கள் இல்லத்திற்கு வருமாறு அழைக்க, அவர்கள் கோரிக்கையை நிராகரித்து விட்டு, ''இந்தப் பசங்க ளோடதான் தங்குவேன்'' எனச் சொல்லி இடர்கள் தாங்கி எங்களோடு குருநாதர் தங்கியிருந்தார்.

★★★

### வீடெல்லாம் மீன் வாசனை

அந்த அலுவலகம் பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேன். வீட்டின் ஓர் ஓரத்திலிருந்து 'அனெக்ஸை', நாம் வாடகைக்கு எடுத்திருந்தோம். அந்த வீட்டில் வேறு சிலர் அறைகளிலும் மாணவர்கள் சிலர் வாடகைக்கு இருந் தனர். எங்கள் பக்கத்து அறையிலி ருந்து சுந்தரேசன், கணநாதன் என் கின்ற, தமிழ் வைத்தியம் கற்று வந்த இளைஞர்கள் இருவர் எங்கள் அறை யிலிருந்த அடுப்பில், தங்கள் பழைய கறிகளை வழக்கமாக, சுட வைத்து செல்வார்கள். குருநாதர் வந்திருந்த போது ஒரு நாள் அவர் குளிக்கச் சென்ற தும், அம்மாணவர்கள். வந்து கறி சுட வைக்கப் போவதாய் கேட்டார்கள். அவர்கள் சுட வைக்கப்போவது மீன் குழம்பு தான் எனத்தெரியாது சம்மதித் தேன். அவர்கள் சுட வைத்து சென்ற தும் வீடு முழுவதும் மீன் நாற்றம். வெங்காயம் கூட உணவில் சேர்க்காத எங்கள் குருநாதர், எங்களுக்காகச் சகிக்க முடியாத அந்த மீன் நாற்றத்தை சகித் துக் கொண்டு முகம் சுளிக்காது இருந் தார்.

★★★

### என்ன தவம் செய்தனை?

மற்றொருநாள் குருநாதர் குளிக்கப் போக, நான் அவருக்குக் கோப்பி தயா ரித்துக்கொண்டிருந்தேன். விழா நாள் களில் நான் என் உடைகளைக் கவனிப்ப தில்லை. குளித்து விட்டு வந்த குருநா தரின் தோளில் துவைத்த எனது வேட்டி கிடந்தது. ''ஒன் வேட்டி அழுக்கா இருந் திச்சு நானே அலம்பிட்டேம்பா'' என் றார். துடித்துப் போனேன். ''ஈர்த் தென்னை ஆட்கொண்ட எந்தை ''

இந்த பயணத்தில் குருநாதரை எங்கள் சங்கீத ஆசிரியை சத்தியபாமா வின் கணவர் ராஜலிங்கம். திரும்பத் தலை மன்னாருக்கு அழைத்து வந்து அனுப்பி வைத்தார். அவர்கள் தொடர்பு பற்றிப் பின் சொல்வேன்.

★★★

### வடமராட்சிக் கம்பன் கழகம்

பருத்தித்துறையைச் சேர்ந்த மு. பொ.வீரவாகு, குகன் ஸ்ரூடியோ அதிபர் குகன் ஆகியோர் பற்றி முன்னரே சொல்லியிருக்கிறேன். கம்பன் கழகத் துடன் இவ் இடைக்காலத்தில் இவர்கள் மிக நெருங்கியிருந்தனர். எங்கள் முயற் சிகள் அத்தனைக்கும் கைகொடுத்தனர். மு.பொ.வீரவாகு பெரும் செல்வர். ஆளுமையாளர், சண்டியர். நினைத்தால் நினைத்ததை எவருக்கும் அஞ்சாமற் செய்பவர். குகன் மென்மையானவர். நிறைந்த கடவுள் பக்தியுடையவர். நல்ல காரியங்களுக்குக் கைகொடுப்ப தில் என்றும் பின் நிற்காதவர். இவ்விரு வரது தொடர்பாலும் கம்பன் கழகம் பலம் பெற்றது நிஜம். என்மேற் கொண்ட அன்பாலும், குருநாதரது உரையில் ஏற்பட்ட விருப்பாலும், வித்து வான் வேலனின் தூண்டுதலாலும், மு.பொ.வீரவாகு, வடமராட்சியில் ஒரு கம்பன் கழகத்தை நிறுவ விரும்பி னார். குகனும் முழுமனதோடு அதற் குத் துணைசெய்தார். இவ்விருவரது முயற்சியாலும், 15.02.1983 செவ் வாய்க்கிழமை மாலை 7 மணியள வில், வடமராட்சிக் கம்பன் கழகம், எங்கள் குருநாதர் பேராசிரியர் இராதா கிருஷ்ணன் அவர்களால் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது.

★★★

### வடமராட்சி கம்பன் விழா (15.02.1983)

### இளையதம்பி தயானந்தா அறிமுகம்

இக்கழகத்தின் தலைவராக இ.உருத் திரா அவர்களும், செயலாளராக ஆ. தேவராஜன் அவர்களும் நியமிக்கப் பட்டனர். 15,16,17-02-1983 செவ் வாய், புதன், வியாழன் ஆகிய தினங் களில், வடமராட்சிக் கம்பன் கழகத் தின் கம்பன் விழா, பருத்தித்துறை சிவன் கோயிலில் அமைந்திருந்த, 'பார்வதவர்த்தினி' கலா மண்டபத்தில் நடைபெற்றது. பட்டிமண்டபம், கவிய ரங்கம், இன்று சந்திக்கும் இவர்கள், தனியுரை எனும் நிகழ்ச்சிகள், இவ் விழாவில் நடைபெற்றன. இவ் விழா விற்தான், பின்னாளில் புகழ் பெற்ற வானொலி அறிவிப்பாளராய்த்திகழ்ந்த, இளையதம்பி தயானந்தா சிறு பைய னாக கவியரங்கத்தில் அறிமுகமானார். ''இவ்வாறு படைத்தாயே ஏன்?'' எனும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில், கூனியாக தயானந்தாவும், கம்பனாக காரை.சுந்தரம்பிள்ளையும் கலந்து கவி பாடினர். தயானந்தாவை சின்னப் பையன்தானே என நினைத்து காரை சுந்தரம்பிள்ளை போதிய ஆயத்தம் செய்யாமால் வர, தயானந்தா அவரை மடக்கு மடக்கு என்று மடக்கினான். அதனால், காரை.சுந்தரம்பிள்ளை சற்றுக் கோபமானார். வீரவாகு, குகன் ஆகியோர் விழா நாள்களில் தங்கள் இல்லங்களில் பெரு விருந்திட்டு மகிழ்வித்தனர். அவ்வொரு விழாவோடு வடமராட்சிக் கம்பன் கழக முயற்சி முடங்கிப் போயிற்று.

★★★

### திருகோணமலையில் இரண்டாவது கம்பன் விழா (18.02.1983)

இவ்விழா 1983 பெப்ரவரி 18,19, 20 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. வடமராட்சி விழா முடிந்த அன்றிரவே, திருமலை புறப்பட்டோம். குருநாத ருடனும் எங்கள் ஆசிரியர்களுடனும் கழக இளைஞர் கூட்டம், ஒன்று திரண்டு திருமலை வந்தது. புதிதாய்க் கட்டப்பட்டிருந்த 'ஹோட்டல்' ஒன் றில், எங்களுக்குத் தங்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அந்த 'ஹோட் டலின்' தரை மிக வழுவழுப்பாக இருந் தது. அங்கு வந்த முதல் நாளே, சிவரா ம லிங்கம் மாஸ்டர் கால் வழுக்கி விழுந்து போனார். ஏற்கனவே, நடக்க முடியாத காலில் அடிபட்டு மிகவும் வருந்தினார். அவரையும் பராமரித்து, விழாவையும் கொண்டாடினோம். அந்த மூன்று நாள்களும் எங்களுக்குக் கிடைத்தது சொர்க்க அனுபவம். விழாவின் எழுச்சி யில் திருமலை கலங்கிப்போனது. பேராசிரியரோடு சென்று, வெந்நீரூற்று, கோணேஸ்வரம் போன்ற இடமெல் லாம் தரிசித்தோம். இவ்விழாவில், மறைந்த கம்பன் அடிப் பொடி அவர் கட்கும், அமரர் தேவன் அவர்கட்கும் அஞ்சலி செலுத்தினோம். திருமலை மக்கள் தங்கள் தமிழார்வத்தால் எங் களைக் கலங்கடித்தனர். மூன்று நாள்களும் விருந்தும் விழாவுமாக அவர்கள் அன்பில் திக்கு முக்காடிப் போனோம். வித்தியாதரன் குடும்பம் முற்றுமுழுதாக தங்களை அர்ப் பணித்து, இவ்விழாவுக்காகப் பாடு பட்டது. வித்தியாதரனின் தாயார் ஆளு மைமிக்க கம்பீரமான பெண்மணி. குருநாதரின் முழு அன்பையும் அவர் சம்பாதித்தார். ஒரு காரியத்தில் மனம் வைத்து விட்டால், உடல், பொருள், ஆவி என அத்தனையையும், அதற் காகத் தியாகம் செய்யக்கூடியவன் வித்தியாதரன். திருமலை கம்பன் விழா வில், மேடையில் ஏறாமலே, பின்னின்று முழுக்காரியங்களையும் சுயநலன் பாராது அவன் செய்தான். இவ்விழா வோடு, திருமலை கம்பன் கழக முயற்சி களும் பின்னர் முடங்கிப்போயின. நாட்டுச் சூழ்நிலையும் அதற்கு ஒரு காரணமாயிற்று. அவ்விழா முடித்து அங்கிருந்து யாழ்ப்பாணம் புறப்பட் டோம்.

★★★


(தொடரும்...)





முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் சித்தி விநாயகர் ஆலயத்துக்கான தர்சன மண்டபத்துக்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பனிக்கன்குளம் கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், பனிக்கன்குளம் பாடசாலை அதிபர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ப-81)



செல்வராசா சந்திரகுமார் கண்ணனின் 8 வருட சமூக சேவையில் முதலாவது அரச விருது. வவுனியா பிரதேச செயலக பிரிவில் அவர் தன்னிகரற்ற சமூக சேவையைக் கௌரவித்து மாகாண சமூக சேவை திணைக்களத்தால் வழங்கபட்டபோது...



திரி சாரணர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக்கான கருத்தாடல் அண்மையில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் இடம்பெற்றது.





தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஊடாக விவசாய அமைச்சின் திட்டத்தால் பன்னாலைக் கிராமத்திற்கு வழங்கப்பட்ட சிறுதானிய பயிர்ச் செய்கையான குரக்கன் செய்கை பயனாளிகளின் குரக்கன் அறுவடை வெற்றிகரமாக மேற்கொண்ட அழகரத்தினம் செல்வராசாவுக்கு அவரது வாழ்வாதாரத்தை மேலும் வளப்படுத்தும் நோக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் 150,000 திட்ட நிதியுடனும் பயனாளியின் 140,000 பங்களிப்புடனும் மொத்தமாக 290,000 பெறுமதியான சிறிய ரக உழவு இயந்திரம் அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலரால் பயனாளிக்கு வழங்கப்பட்டது.





முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத் தில் பனிக்கன்குளம் பாடசாலை வீதி 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாது காணப்படுகிறது.

பெரிய குழிகளாகக் காணப்பட்ட இந்த வீதி நேற்று முன்தினம் மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரியின் ஆலோசனைக்கமைய பொலிஸ் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் கிராம மக்கள், இளைஞர்கள் இணைந்து வீதியிலிருந்த பெரிய குழிகளுக்கு மண்ணிட்டு நிரவி வீதியை சிரமதானம் மூலம் சீர் செய்துள்ளனர். (ப-81)













யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்ததின நினைவு தினம் கடந்த திங்கட்கிழமை, நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. நிகழ்வின் சில பதிவுகள்... (இ-19)

# நெஸ்பி பிரபுவுக்கு இரகசியமாக நன்றிக் கடிதம் அனுப்பினார் மைத்திரி



கொழும்பு, டிசெ. 14

இலங்கையில் போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என்று பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றிய நெஸ்பி பிரபுவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரகசியமாக நன்றிக் கடிதம் அனுப்பியுள்ளார் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரில் ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டது போல 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றும், இறுதிப் போரில் 7000 தொடக்கம் 8000 வரையான வர்களே கொல்லப்பட்டனர் என்றும், அவர்களில் கால் வாசிப் பேர் சாதாரண உடையில் இருந்த புலிகள் என்றும் கடந்த ஒக்ரோபர் மாதம் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றியபோது, நெஸ்பி பிரபு கூறியிருந்தார்.

இந்த நிலையில், இலங்கை அரசுக்கு ஆதரவாக கருத்து வெளியிட்ட நெஸ்பி பிரபுவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார் என்றும் தமிழ் பிரிவினைவாதிகளின் அழுத்தங்களால் அந்தக் கடிதம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நெஸ்பி பிரபுவுக்கு நன்றி தெரிவித்து சிறிலங்கா சார்பில் அதிபர் மைத்திரிபால சிறிசேன கடிதம் எழுதியுள்ளார். இது பாராட்டப்பட வேண்டியது. ஆனால் இந்தக் கடிதம் பற்றி சிறிலங்காவிலோ, பிரித்தானியாவிலோ யாருக்கும் தெரியாது.

ஜனாதிபதி மைத்திரியின் கடிதம், இலங்கை வெளிவிவகாரச் செயலரின் கடிதம் ஒன்றுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது.

வெளிவிவகாரச் செயலரின் இணைப்புக் கடிதத்தில், இலங்கை ஜனாதிபதியின் கடிதத்தின் உள்ளடக்கம் இலங்கை அல்லது பிரித்தானிய ஊடகங்களுக்குப் பகிரப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

ஏன் இந்த இரகசியம்?

இலங்கை ஜனாதிபதி தனது கருத்தை வெளிப்படுத்துவதற்கு அச்சம் கொண்டிருந்தால் அது தமிழ் பிரிவினைவாதிகள் குறித்த அச்சமாகவே இருக்கும்.

இந்த இரகசியம் குறித்து இலங்கை ஜனாதிபதி அறிந்திருந்தாரா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (க)

## மணல் ஏற்றியவருக்கு தண்டப்பணம்!



முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு - முள்ளியவளை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற நபருக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரை நேற்று முன் தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற நபரை பொலிஸார் கைது செய்து, அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.



## ஈரான் தூதுவருடன் கடற்படைத் தளபதி!

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் சஹரி அமிரானி மொஹமட், கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவை சந்தித்துள்ளார்.

கடற்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அந்துடன், இந்தச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச்சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வில் ஈரானின் பாதுகாப்பு ஆலோசகரும் கலந்துகொண்டுள்ளார். (க)

## காயங்களை ஆற்ற நீண்டகாலம் தேவை

### மங்கள சமரவீர கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 14

யுத்தம் முடிவடைந்தாலும் மக்களின் காயங்களை ஆற்றுவதற்கு பல வருடங்கள் எடுக்கும். இலங்கை ஏற்கனவே இந்த விடயத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்த சவால்களை வெற்றி கொள்வதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் செயற்பாட்டை அரசால் தனித்து செய்ய முடியாது. அரசாங்கத்தால் தனித்து அனைத்து வெற்றியையும் பெற முடியாது.

யுத்தம் முடிவடைந்தாலும் மக்களின்காயங்களை ஆற்றுவதற்கு பல வருடங்கள் எடுக்கும். இலங்கை ஏற்கனவே இந்த விடயத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இந்த சவால்களை வெற்றி கொள்வதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொன்னாலையில் ஆஞ்சநேயரின் ஜெயந்திப் பெருவிழா

வட்டுக்கோட்டை, டிசெ.14

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு தசமதின இலட்சார்ச்சனை பெருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை இலட்சார்ச்சனை இறுதிநாள் பெருவிழா இடம்பெறும். அன்றைய தினம் அமாவாசை திதியும் மூலநட்சத்திரமும் கூடிய வேளையில் ஆஞ்சநேய பெருமானின் ஜெயந்திப் பெருவிழாவும் 108 சங்காபிஷேகம் விசேட பூஜை தீப அர்ச்சனை, திருவிழா என்பன நிகழும். தொடர்ந்து மகேஸ்வர பூஜை (அன்ன தானம்) இடம்பெறும்.

இதேவேளை, எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முதல் 13-01-2018 சனிக்கிழமை வரை, தினமும் அதிகாலை 5மணிக்கு திருபாவை பூசை இடம்பெறும். (இ)

# அதிக விலைக்கு தேங்காய் விற்ற 28 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 14

மத்திய மாகாணத்தில் நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு தேங்காய் விற்பனையில் ஈடுபட்ட 28 வியாபாரிகளுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் கடந்த மூன்று நாட்களாக 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே நிர்ணய விலையை விடக் கூடுதல் விலையில் தேங்காய் விற்பனை செய்த வியாபாரிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார சபையின் மத்திய மாகாண உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். நசீர் தெரிவித்தார்.

தேங்காய் ஒன்றின் அதிக பட்ச சில்லறை விலை 75 ரூபா என அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப் பட்டிருந்த நிலையில், நாடு முழுவதும் நுகர்வோர் விவகார



அதிகார சபையினால் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் மைசூர் பருப்பு (கிலோ ரூபா 130/=), கட்டா கருவாடு (கிலோ ரூபா 1000/=), சாலையா கருவாடு (கிலோ ரூபா 420/=), தேங்காய் (ரூபா 75/=) போன்ற நுகர்வுப் பொருள்களுக்கு அரசாங்கத்தினால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதிக விலைக்கு நுகர்வுப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில், கண்டி மாவட்டத்தில் 45 பேரும், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தலா 23 பேரும் நுகர்வோர் விவகார அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த 91 வியாபாரிகளுக்கும் எதிராக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். நசீர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரட்டை இலைக்கு லஞ்சம்:
# டி.டி.வி.தினகரன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

புதுடில்லி,டிசெ.14

இரட்டை இலை சின்னம் பெற தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என டி.டி.வி தினகரன் மீது டெல்லி பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர்.

இரட்டை இலை சின்னம் பெற தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என டி.டி.வி. தினகரன் மீது டில்லி குற்றப்பிரிவுப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இது தொடர்பாக தினகரன் மற்றும் இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் டி.டி.வி.தினகரன்பிணையில்வெளியே வந்துள்ளார்.



இவ்வழக்கில் கடந்த ஜூலை மாதம் டில்லி திஸ் ஹசாரி நீதிமன்றத்தில் குற்றப்பிரிவு பொலிஸார் முதல் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தனர். இதில் சுகேஷ் சந்திரசேகரின்பெயர்மட்டும்இடம் பெற்றிருந்தது. இந்த நிலையில் துணைக் குற்றப்பத்திரி கையை டில்லிபொலிஸார்நேற்றுமுந்தினம் தாக்கல் செய்துள்ளனர். அதில் தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா உள்ளிட்ட ஐந்து பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் தினகரன் போட்டியிட்டுப் பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்பட்டுள்ளது.

## காளானை சாப்பிட்டமையால் வெள்ளையானவர் மோடி

இறக்குமதி செய்யப்பட்ட காளான்களைச் சாப்பிட்டு வெள்ளையானவர் பிரதமர் மோடி. எனவேதான் அவர் அழகாக மாறியுள்ளார் என குஜராத் காங்கிரஸுடன் கூட்டணி வைத்த அல்பேஷ் தாக்குர் கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத்தில் ஆளும் பா.ஜ.கவை எதிர்த்து காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் தீவிரமாகப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அங்கு காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள படேல் இனத் தலைவர்களில் ஒருவரான அல்பேஷ் தாக்குர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். அப்போது அவர் பேசியவை வருமாறு:-

பிரதமர் மோடி கடந்த பல ஆண்டுகளுக்கு முன் கறுப்பாகத்தான் இருந்தார். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகப் பிரதமர் மோடி பளபளவென வெள்ளையாகக் காணப்படுகிறார். இதற்கு என்ன காரணம் தெரியுமா?

பிரதமர் மோடி தாய்வானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளானைச் சாப்பிடுகிறார். ஒரு காளானின் விலை 80 ஆயிரம் ரூபா. தினமும் 5 காளான் சாப்பிடுகிறார்.

அப்போது கறுப்பு நிறமுடைய அவர், தற்போது அழகாக மாறியுள்ளார். தினமும் 4 லட்சம் ரூபா மதிப்புள்ள காளான் சாப்பிடும் பிரதமரால் மாதம் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா செலவாகிறது. இதனால் தான் கறுப்பு நிற முடைய மோடி, மிகவும் அழகாக மாறியுள்ளார் என குற்றம் சாட்டும் வகையில் கூறியுள்ளார்.

## வேலூர் சிறையில் இருந்த பேறிவாளன் புழல் சிறைக்கு



ராஜீவ்காந்தி கொலை வழக்குக் கைதி பேரறிவாளன் வேலூர் சிறையில் இருந்து சென்னை புழல் சிறைக்கு நேற்று மாற்றப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கு கைதிகள் முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இவர்கள் தங்களது விடுதலைக்காகப் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். அதில், பேரறிவாளனுக்குத் தமிழக அரசு 2 மாதம் விடுப்பு வழங்கியது. இதையடுத்து பேரறிவாளன் மீண்டும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். பேரறிவாளன் மூட்டு வலி, சிறுநீரகத் தொற்றுநோய் என்பவற்றால் அவதிப்பட்டதால் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அடிக்கடி சென்று சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் பேரறிவாளன், சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற வசதியாகத்தன்னை வேலூர் சிறையில் இருந்து சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று சிறைத் துறைக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று வேலூர் சிறையில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பேரறிவாளனைச் சென்னை புழல் சிறையில் மாற்றப்பட்டார்.

ஒரு மாதம் சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் வேலூர் சிறையில் அடைக்கப்படுவார் என்று தெரிக்கப்பட்டுள்ளது.

## ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்க இந்திய உச்ச நீதிமன்றம் மறுப்பு



ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மறுத்தனர். அத்துடன், இந்த வழக்கை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உத்தரவிட்டனர்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுப் போட்டியை நிரந்தரமாக நடத்தும் வகையில் தமிழக அரசு சட்டத்திருத்த மசோதாவை சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. இதேபோல் கர்நாடகாவில் பாரம்பரியமாக நடத்தப்படும் கம்பளா எனப்படும், எருது பந்தயத்தைத் தடையின்றி நடத்துவதற்காக சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டங்களை எதிர்த்து பீட்டா, விலங்குகள்நல அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. இவ்வழக்கில் தமிழக அரசு பதில் அளிக்கும்படி உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

இந்த நிலையில் இவ்வழக்கு நேற்றுமுந்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசின் பொதுச் சட்டங்களை மீறும் வகையில் மாநில அரசுகள் சட்டம் இயற்ற முடியுமா? எனநீதிபதிகள்கேள்வி எழுப்பினர். அத்துடன், ஜல்லிக்கட்டு அனுமதியை எதிர்க்கும் மனுக்கள் மீதான விசாரணையை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உத்தர விட்டனர். எனவே, இனி அரசியல் சாசன அமர்வு இவ்வழக்கை விசாரிக்கும்.

அதேசமயம், ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு நீதிபதிகள் இடைக்கால தடை விதிக்க மறுத்துவிட்டனர். எனவே, ஜல்லிக்கட்டு போட்டியைத் தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் இல்லை.

# மனிதர்களால் உருவாக்கப்பட்டதுதான் இராமர் பாலம் கட்டுக்கதை அல்ல

## அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

இராமர் பாலம், மனிதர்களால் உருவாக்கப்பட்டது, அது கட்டுக்கதை அல்ல என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே உள்ள பாம்பனில் இருந்து இலங்கையில் உள்ள தலைமன்னார்வரை கடலுக்கு அடியில் 50 கிலோ மீற்றர் தூரத்துக்கு இராமர் பாலம் அமைந்துள்ளது. இராமாயண காலத்தில், இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்கச் சென்ற இராமருக்காக வானர சேனைகள் அந்தப் பாலத்தைக் கட்டினர் என நம்பப்படுகிறது. அதனால், அதை இந்துக்கள் புனிதமாகக் கருதுகிறார்கள்.

ஆனால், ராமர் பாலம் என்பது வெறும் கட்டுக்கதை என்று மற்றொரு சாரார் கூறுகிறார்கள். கடலுக்கு அடியில் இயற்கையாக அமைந்த மணல் திட்டுகளே அவை என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

கடந்த 2005ஆம் ஆண்டு, இந்தியா-இலங்கை இடையிலான கடல் பகுதியைச் சரக்கு கப்பல் போக்குவரத்துக்காக ஆழப்படுத்த சேது சமுத்திர திட்டம் தொடங்கப்பட்டது.




ஆனால், அத்திட்டத்தின் வழித்தடம், ராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் வகையில் இருந்ததால், அதற்கு எதிர்ப்பு எழுந்தது. இவ்விவகாரம் தொடர்பாக வழக்கு, உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ளது. இம்மாத இறுதியில் மத்திய அரசு தனது பிரமாண மனுவைத் தாக்கல் செய்ய உள்ளது.

இந்த நிலையில், இராமர் பாலம் கட்டுக்கதை அல்ல, அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதுதான் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அமெரிக்காவில், இந்தியானா பல்கலைக்கழகம், தெற்கு ஓரிகன் பல்கலைக்கழகம், கொலராடோ பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதைக் கண்டறிந்துள்ளனர்.

இராமர் பாலம் அமைந்துள்ள இடத்தில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்கள் உள்ளிட்ட ஆய்வுகளை வைத்து அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். இது தொடர்பாகத் தெற்கு ஓரிகன் பல்கலைக்கழக வரலாற்று அகழ்வாராய்ச்சியாளர் செல்சியா ரோஸ் கூறியவை வருமாறு:-

இராமர் பாலம் பகுதியில் கடலுக்கு அடியில் அமைந்துள்ள மணல் திட்டுகள் வேண்டுமானால், இயற்கையாக உருவானவையாக இருக்கலாம். ஆனால், அங்குள்ள சுண்ணாம்புக்கற் பாறைகள், மனிதர்களால் உருவாக்கப்பட்டவைதான். அவை 7 ஆயிரம் ஆண்டுகள் பழைமையானவை என்று தெரிவித்துள்ளார்.

# வாழைப்பழம் சாப்பிடும் காணொலி: எகிப்து பாடகிக்கு 2 ஆண்டுகள் சிறை



கெய்ரோ,டிசெ.14

இசைக் காணொலி ஒன்றில் அநாகரிகமாக வாழைப்பழம் சாப்பிடுவது போல நடித்தமையால் எகிப்து பாடகி ஷாய்மாவுக்கு அந்நாட்டு நீதிமன்றம் இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

பிரபல எகிப்து நாட்டுப் பொப் பாடகி ஷாய்மா அகமது சமீபத்தில் ஓர் இசைத் தொகுப்புக் காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தார். ஒரு வகுப்பறையில் நடப்பது போன்று அமைக்கப்பட்டிருந்த இந்த காணொலியில் பொப் பாடகி ஷாய்மா அகமதுவும் அவரது குழுவினரும் நடனம் ஆடியிருந்தனர்.

இதில் ஒரு காட்சியாக ஷாய்மா வாழைப்பழம் ஒன்றை சாப்பிடுகின்றமை போன்ற காட்சி வருகிறது. ஐந்து ஆண்களுக்கு இடையில் நின்று கொண்டு அவர் வாழைப்பழம் சாப்பிடுவதும், அப்போது ஒலிக்கும் பாடலின் வரியும் ஆபாசத்தைத் தூண்டுகின்றது எனப் பலர் குற்றம் சாட்டினர்.

இந்த நிலையில் இந்தக் காணொலியைப் பார்த்த எகிப்து பொலிஸார் வழக்குத் தொடர்ந்து பாடகியை கடந்த மாதம் கைது செய்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் அவர் தவறு இழைத்துள்ளார் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அநாகரிகமான படத்தில் அவர் நடித்ததற்காக இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகின்றது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# அமெரிக்க இராணுவத்தில் மீண்டும் திருநங்கைகள்

வொஷிங்டன்,டிசெ.14

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர அதிபர் ட்ரம்ப் முட்டுக்கட்டை போட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவால் வரும் ஆண்டு முதல் திருநங்கைகள் சேர்க்கப்படுவார்கள் எனப் பென்டகன் அறிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளைச் சேர்க்கும் திட்டத்தை முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கொண்டு வந்தார். இந்தத் திட்டத்தைப் பலரும் ஆதரித்த நிலையில், அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற பின் அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளை தேர்வு செய்வது தற்காலிகமாக ஒத்தி வைப்பதாகக் கூறப்பட்டது.

என்னுடைய இராணுவ நிபுணர்களுடன் ஆலோசித்த பிறகு அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் பணி புரிய அரசு அனுமதிக்காது என்பதை பரிந்துரைக்கிறேன். திருநங்கைகளால் இராணுவத்தில் ஏற்படும் அதிக அளவிலான மருத்துவச் செலவுகள் மற்றும் பிளவுகள் இனி இருக்காது. என ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப் உத்தரவுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள திருநங்கைகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போராட்டத்தில் இறங்கினர். நீதிமன்றங்களிலும் இது தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டது. வொஷிங்டன் மாகாண நீதிமன்றம் உட்பட மூன்று நீதிமன்றங்கள் ட்ரம்ப் அறிவிப்புக்குத் தடை விதித்தும், திருநங்கைகளை மீண்டும் சேர்க்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.

இதனையடுத்து, வரும் ஜனவரி மாதம் முதல் இராணுவத்தில் திருநங்கைகள் வழக்கம் போல தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என இராணுவத்தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

# அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குத் தடை: வெனிசுலா அதிபருக்கு அமெ. கண்டனம்



வொஷிங்டன்,டிசெ.14

அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குத் தடை விதிக்கப்படும் என்ற அதிபர் நிக்கொலஸ் மதுரோவின் கருத்திற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெனிசுலா நாட்டில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 3 முக்கிய எதிர்க்கட்சிகள் போட்டியிடாமல் புறக்கணித்தன. இதையடுத்து இனிவரும் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் போட்டியிடத் தடை விதிக்கப்படும் என்று அதிபர் நிக்கொலஸ் மதுரோ அறிவித்தார்.

இந்த நிலையில் அங்கு அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதில் எதிர்க்கட்சிகள் போட்டியிட அதிபர் நிக்கொலஸ் மதுரோ வாய்ப்பு அளிக்க மாட்டார் என்று தெரியவந்துள்ளது. இது எதிர்க்கட்சிகள் மத்தியில் கொந்தளிப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அது மட்டுமின்றி, இது சர்வாதிகாரப் போக்கை நோக்கி நிக்கொலஸ் மதுரோ செல்வதைக் காட்டுகின்றது என சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர். நிக்கொலஸ் மதுரோவின் இந்த போக்கிற்கு அமெரிக்காவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில், அனைத்து மக்களும் போட்டியிட வாய்ப்பு அளித்து, நேர்மையானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைமுறை மூலம் தங்களது கருத்துக்களை தெரிவிக்க வெனிசுலா மக்களுக்குத் தகுதியும், உரிமையும் உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

(ப)

# ஊரே அழிந்த பிறகும் தனியாக வாழும் 90 வயது முதியவர்



நியூயோர்க்,டிசெ.14

அமெரிக்காவில் புயலால் பியூர்டா ரிகோ தீவில் இருந்து அனைவரும் வெளியேறிய நிலையில், 90 வயது முதியவர் மட்டும் அங்கு தனியாக வாழ்ந்து வருகிறார்.

அமெரிக்கா அருகே உள்ள மிகச்சிறிய தீவு பியூர்டாரிகோ. இங்கு கடந்த சில மாதங்களாக மாறி மாறிப் புயல் வீசுகிறது. தற்போது பெரும்பாலான தீவுப் பகுதிகள் அழிந்து விட்டன.

இங்கு இர்மாபுயல் வீசியது இதனால் அங்கு ஆயிரத்து 500 பேர் இறந்தனர். 90 வீத கட்டடங்கள் இடிந்து தீவு மோசமாகப் பாதிக்கப்பட்டது. அங்கிருந்து ஏராளமானோர் வெளியேறி விட்டனர். இவர்கள் அனைவரும் நியூயோர்க், கலிபோர்னியா, பென்சில்லேனியா பகுதிகளில் குடியேறி விட்டனர்.

இந்த நிலையில் பியூர்பாரிகோவிலில் இருந்து வெளியேற அலிஜான்ரோ என்ற 90 வயது முதியவர் மறுத்து விட்டார். எங்கும் செல்லாமல் அங்கேயே வாழ்கிறார்.

முன்னதாக அனைவருடனும் வெளியேறி பென்சில் வேனியா சென்றார். ஆனால் அங்கு இருக்கப் பிடிக்காமல் மீண்டும் பியூர்பாரிகோ தீவுக்கே திரும்பி விட்டார். இவரைப்போன்று சில அரசு அதிகாரிகளும் அங்கு உள்ளனர்.

கடந்த 8 நாள்களாக அங்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் இல்லை. ஆனால் தனியாக வாழும் தாத்தா அலிஜான்ரோ எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரது ஊர் பாசம் அமெரிக்கா முழுவதும் வைரலாகப் பரவி வருகிறது.

ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு:

# விசாரிக்கத் தேவை இல்லை என வெள்ளை மாளிகை அறிக்கை




வொஷிங்டன்,டிசெ.14


அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டில் நாடாளுமன்றக் குழுவின் விசாரணை தேவை இல்லை என வெள்ளை மாளிகையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெற்றபோது குடியரசு கட்சியின் வேட்பாளராக களமிறங்கிய டொனால்ட் ட்ரம்ப் மீது பல்வேறு பெண்கள் பாலியல் குற்றச்சாட்டை சுமத்தினார்கள். தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு டொனால்ட் ட்ரம்ப் மறுப்புத் தெரிவித்தார். இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக 16 பெண்கள் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் என்ற ஆவணப் படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளை கேட்க வேண்டும் என ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே கூறியமை பரபரப்பை ஏற்படுத்தியது. ட்ரம்ப் பதவி விலக வேண்டும் எனவும், நாடாளுமன்ற விசாரணைக்குழு அமைக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்க மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், இது தொடர்பாக வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், ட்ரம்ப் மீதான இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவை, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது இதற்கான விரிவாக பதில் அளிக்கப்பட்டு விட்டது. மக்களும் வெற்றியைக் கொடுத்து அவர்களுக்குப் பதிலளித்துள்ளனர். பாதிக்கப்பட்ட பெண்கள் கேட்கிறபடி, நாடாளுமன்ற விசாரணை நடத்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதல் மனைவிக்கு கோஹ்லியின் பரிசு



விராட் கோஹ்லி தனது காதல் மனைவிக்கு சுமார் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள வைர மோதிரத்தைத் திரு மணப் பரிசாக அளித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனும், ஹிந்தி நடிகை அனுஷ்கா சர்மாவும் கடந்த 2013ஆம் ஆண் டில் இருந்து காதலித்து வந்தனர். முதலில் மறைமுக மாக இருந்த இந்த காதல் பின்னர் வெளிப்படையாக இருந்தது.

4 ஆண்டுகளாகக் காதலித்து வந்த இருவரும் திரு மணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். இதற்காக விராட் கோஹ்லி இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடர் மற்றும் 20 ஓவர் போட்டியில் ஓய்வு கேட்டு இருந்தார். இவர்களது திருமணம் இத்தாலியில் உள்ள மிலான் நகர் அருகே டஸ்கேனியில் உள்ள சொகுசு விடுதியில் கடந்த 11ஆம் திகதி நடந்தது.

இந்தத் திருமணத்தில் விராட் கோஹ்லி, பிரத்தியே கமாக வடிவமைக்கப்பட்ட வைர மோதிரத்தை அனுஷ்கா சர்மாவுக்குத் திருமணப் பரிசாக அளித்தார். ஆஸ்திரியா வைச் சேர்ந்த பிரபல வைர நகை வடிவமைப்பாளர் களால் வடிவமைக்கப்பட்ட இந்த மோதிரத்தின் விலை சுமார் ஒரு கோடி ரூபா என திருமண ஜோடிக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர். இது திருமணம் நடைபெற்ற சொகுசு விடுதிக்குச் செலவிடப்பட்ட தொகையை விட அதிகமானதாகும்.

### 3ஆவது ஆஷஸ் டெஸ்ட்:

# ஆஸிக்கு இங்கிலாந்து பதிலடி கொடுக்குமா?



இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரின் முதல் இரண்டு டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா விடம் தோற்றமைக்கு இன்றைய போட்டி யில் பதிலடி கொடுக்குமா? என்ற எதிர்பார்ப் புக் கிளம்பியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆஸ்திரே லியாவில் சுற்றுப்பயணம் செய்து விளை யாடி வருகிறது. இரு அணிகள் இடையே யான 5 டெஸ்ட் கொண்ட ஆஷஸ் தொட ரில் ஆஸ்திரேலியா 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் 10 விக்கெட் வித்தியாசத்திலும், அடிலெய் டில் நடந்த 2ஆவது டெஸ்டில் 120 ஓட்டங் கள் வித்தியாசத்திலும் ஆஸி. அணி வெற்றி பெற்று இருந்தது

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

முதல் 2 டெஸ்டில் தோற்ற இங்கிலாந்து அணி நாளைய டெஸ்டிலாவது பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தொடரை இழக்காமல் இருக்க அந்த அணி வெற்றி பெறுவது அவசியமாகிறது.

முன்னாள் கப்டன் குக்குக்கு இந்தப் போட்டி 150ஆவது டெஸ்ட் ஆகும். இந்த மைல்கல்லை தொடும் முதல் இங்கிலாந்து வீரர் இவர் ஆவார். சர்வதேச அளவில் 8ஆவது வீரராகவும் உள்ளார்.

ஆஸ்திரேலிய அணி இந்த டெஸ்டில் வென்று ஹட்ரிக் சாதனையுடன் தொடரைக் கைப்பற்றும் ஆர்வத்துடன் உள்ளது.

## சிக்ஸர்களால் சதம் விளாசி சாதனை



ரி-20 போட்டிகள் என்றாலே நினைவுக்கு வருபவர் கிறிஸ் கெய்ல். அவரின் அரக்கத்தன மானசிக்ஸர்கள், பவுண்டரிகளால் எதிரணி பந்து வீச்சாளர்களை நிலைகுலையச் செய்வதில் வல்ல வர்.

ஐ.பி.எல். போட்டிகளின் போது தனது அதிரடி சிக்ஸர்களால் இந்தி யர்களின் மனதில் இடம்பிடித் துள்ள கெய்ல், தற்போது பங் களாதேஷில் நடைபெற்று வரும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் கிரிக் கெட் போட்டியில் மீண்டும் தன் சிக்ஸர்களால் சாதனை படைத் துள்ளார்.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் போட்டி நேற்றுமுன்தினம் டாக்கா டைனமைட் அணிக்கும் ரங்பூர் ரைடர் அணிக்கும் இடையே போட்டி நடந்தது.

இதில் ரங்பூர் ரைடர் அணிக் காக விளையாடிய கிறிஸ் கெய்ல் 69 பந்தில் 18 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடித்து 146 ஓட் டங்கள் குவித்தார்.

வெறும் 18 சிக்ஸர்களால் (108 ஓட்டங்கள்) சதத்தை அடித்து மீண்டும் தான் அதிரடி நாயகன் என்பதை கெய்ல் உணர்த்தியுள் ளார்.

## அனுபவித்து விளையாடுவேன்

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடி வுக்கு வர இருக்கிறது. இதனால் என்னுடைய இறுதிப் போட்டிகள் சிலவற்றை அனுபவித்து விளையாடுவேன் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கிரிக்கெட் வீர ரான கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள 'பிக் பாஷ்' இரு பதுக்கு - 20 கிரிக்கெட் தொடருடன் கிரிக்கெட்டிலி ருந்து முழுமையாக ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீர ராகத் திகழ்ந்த 37 வயதான கெவின் பீட்டர்சன், அந் நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட கருத்து மோத லால் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடருக்குப் பின் சர்வதேச போட்டிகளில் விளையாடவில்லை.

எனினும், இருபதுக்கு - 20 லீக் தொடர்களில் விளை யாடி வந்தார். ஐ.பி.எல். தொடரில் விளையாடி வந்த பீட்டர்சன் காயம் காரணமாக இம்முறை நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். தொடரில் வர்ணனையாளராகச் செயற்பட்டார்.

இம்மாதம் நடுப்பகுதியில் ஆஸ்திரேலியாவில் 'பிக் பாஷ்' இருபதுக்கு - 20 கிரிக்கெட் லீக் ஆரம்பமாகவுள் ளது. இந்தத் தொடருடன் ஒட்டுமொத்த கிரிக்கெட்டுக் கும் விடைகொடுக்கப் போகின்றேன் என பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பீட்டர்சன் தெரிவிக்கையில்,

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடி வுக்கு வர இருக்கிறது. இதனால் என்னுடைய கடைசிப் போட்டிகளை அனுபவித்து விளையாடுவேன். ஓய்வு மிகவும் நெருங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.







ஓய்வு தொடர்பாக இன்னும் எந்த முடிவும் எடுக்க வில்லை என இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரரும், முன்னாள் அணித் தலைவருமான அலஸ்டயர் குக் கூறி யுள்ளார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் இடையி லான ஆஷஸ் தொடரின் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி காலை 8 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியின் இங்கிலாந்து தொடக்க ஆட்டக் காரரும், முன்னாள் அணித் தலைவருமான அலஸ்டயர் குக்கின் 150ஆவது டெஸ்டாகும். இந்த மைல்கல்லை எட்டும் முதல் இங்கிலாந்து வீரர், ஒட்டுமொத்த அள வில் 8ஆவது வீரர் என்ற சிறப்பை அவர் பெறுகிறார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்டில் அவர்' சோபிக்கத் தவறியதால் இந்தத் தொடருடன் ஓய்வு பெறக்கூடும் என்று முன்னாள் வீரர்கள் கெவின் பீட்டர்சன், மிட்செல் ஜான்சன் ஆகியோர் கூறியிருந்த னர்.

இதுபற்றி 32 வயதான அலஸ்டயர் குக்கிடம் நேற்று நிருபர்கள் கேட்டபோது, எதிர்காலம் தொடர்பாக நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. எப்போது ஓய்வு பெறுவேன் என்பது எனக்குத் தெரியாது. தற்போது முழுக் கவனமும் இந்த டெஸ்ட் மீதுதான் இருக்கிறது. எனது வாழ்க்கையில் மிகப்பெரிய போட்டி இதுவாகும்.

என்னைப் பற்றி விமர்சித்தவர்களுக்கு என்னிடம் பேசுவதற்கு நேரம் இல்லை போலும். வலைப் பயிற்சி யில் நான் கடினமாக உழைப்பது அவர்களுக்குத் தெரி யாது. துடுப்பாட்டப் பயிற்சியாளருடனும் நிறைய நேரம் செலவிடுகிறேன். இன்னும் சாதிக்கும் உத்வேகத்தில் இருக்கிறேன் என்றார்.

## மொஹாலியில் இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில்

# ரோஹித் சர்மாவின் இரட்டைச் சதத்தோடு இலங்கையைத் துவம்சம் செய்த இந்தியா




மொஹாலி, டிசெ.14

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணித்தலைவர் ரோஹித் சர்மாவின் அபார ஆட்டத்தினால் அந்த அணி 141 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தரம்சாலாவில் நடைபெற்று முடிந்த இத்தொடரின் முதல் போட்டியில் வெற்றி பெற்று ஒருநாள் போட்டிகளில் தமது தொடர்ச்சியான தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்ட தொடரிலும் 1:0 என முன்னிலை அடைந்திருந்தது. அத்தோடு இந்திய மண்ணில் இருதரப்பு ஒரு நாள் தொடரொன்றை இதுவரை இலங்கை அணி கைப்பற்றாத காரணத்தினால் அந்த வரலாற்றுப் பதிவை மேற்கொள்ளும் நோக்கோடு இந்தப் போட்டியில் விளையாடத்தயாரானது.

மொஹாலியின் பஞ்சாப் கிரிக்கெட்சங்கமைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் திசர பெரேரா களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

போட்டிக்காக இலங்கை அணியில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமல் இருக்க, ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி, தமிழகத்தை சேர்ந்த 18 வயதேயான சுழல்பந்து வீச்சாளரான வாஷிங்டன் சுந்தரை குல்தீப் யாதவ்வுக்குப் பதிலாக அறிமுகம் செய்திருந்தது.

தொடர்ந்து நாணய சுழற்சி முடிவுகளுக்கு அமைவாக இந்திய அணியினர் ரோஹித் சர்மா மற்றும் தவான் ஆகியோருடன் தமது துடுப்பாட்டத்தைத் தொடங்கினர். இரண்டு வீரர்களும் அதிரடி கலந்த நிதானத்தோடு இந்தியாவுக்கு சிறப்பான ஆரம்பம் ஒன்றுக்கு அத்திவாரமிட்டனர். முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 115 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில், ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தவான் அரைச் சதம் கடந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்தியாவின் முதல் விக்கெட்டாக ஆட்டமிழந்த தவான் தனது 23 ஆவது ஒரு நாள் அரைச்சதத்துடன் மொத்தமாக 67 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

எனினும், இரண்டாம் விக்கெட்டுக்காகப் புதிய துடுப்பாட்ட வீரரான ஸ்ரேயாஸ் ஐயருடன் ஜோடி சேர்ந்த ரோஹித் சர்மா மெதுவான முறையில் ஒரு சிறந்த இணைப்பாட்டத்துக்கு வித்திட்டு பிறகு அதிரடி காட்டத் தொடங்கி தனது 16 ஆவது ஒரு நாள் சதத்தைக் கடந்தார். இந்திய அணி இதனால் 300 ஓட்டங்களை இலகுவாகக் கடந்தது. சர்மா, ஐயர் ஆகியோரினால் இரண்டாம் விக்கெட் இணைப்பாட்டமாக அதிவலுவான 213 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில், இந்திய அணியின் இரண்டாவது விக்கெட் வீழ்ந்தது. இந்திய அணியின் இரண்டாவது விக்கெட்டாக ஓய்வறை நடந்த ஸ்ரேயாஸ் ஐயர் தனது கன்னி ஒரு நாள் அரைச் சதத்துடன் மொத்தமாக 70 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 9 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 88 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.




தொடர்ந்தும் இந்திய அணித்தலைவரான ரோஹித் சர்மா அதிரடியுடன் இலங்கை பந்து வீச்சாளர்களை நிர்மூலம் செய்து இரட்டைச்சதம் கடந்தார். இவரின் இந்த அபார துடுப்பாட்டத்தின் துணையோடு இந்தியா 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 392 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஒரு நாள் போட்டிகளில் இன்றைய அபார ஆட்டம் மூலம் மூன்றாவது தடவையாக இரட்டைச்சதம் கடந்து உலக சாதனை செய்த ரோஹித் சர்மா, மொத்தமாக 153 பந்துகளில் 12 சிக்ஸர்கள் மற்றும் 13 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 208 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் நின்றிருந்தார். இது சர்மா இலங்கை அணிக்கு எதிராக ஒரு நாள் போட்டிகளில் பெற்ற இரண்டாவது இரட்டைச் சதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அவர் அடிக்கும் மூன்றாவது இரட்டைச் சதமாகும்.

இதன்மூலம் இலங்கை அணிக்கு 393 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை இந்திய அணி நிர்ணயித்தது. இந்தியாவுக்கு ஓட்டங்களை வாரிக்கொடுத்த இலங்கையின் பந்து வீச்சு சார்பாக அணித்தலைவர் திசர பெரேரா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஆறுதல் அளித்து இருந்தார்.

தொடர்ந்து களம் இறங்கிய இலங்கை அணி, வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது.

இலங்கைத் தரப்பில் மத்தியூஸ் 111 ஓட்டங்களைப் பெற்றார்.

சஹால் 3 விக்கெட்டுக்களையும், பும்ரா 2 விக்கெட்டுக்களையும், பி.குமார், பண்டயா, வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள்



இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகம் மற்றும் யாப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதான 3 காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1973ஆம் ஆண்டின் 25ஆவது சட்டத்திற்கு அமைய இலங்கை கிரிக்கெட்டின் யாப்பைத் திருத்தியமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கிலும், புதிய பொதுச் செயலாளர் ஒருவரை நியமிப்பதற்காகவும் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஜயந்த தர்மதாச உதவித் தலைவர் பதவியிலிருந்து விலகியமையை அடுத்துப் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய மொஹான் டி சில்வா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி, உள்ளூர் கிரிக்கெட் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக அவர் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாக சபையின் உதவித் தலைவராகச் செயற்பட்ட ஜயந்த தர்மதாச, அடுத்தடுத்து நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்களைப் புறக்கணித்து வந்துள்ள நிலையில், அவர் பதவியிலிருந்து விலகினார் எனக் கருதி இப்புதிய நியமனம் வழங்கப்பட்டது என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், உள்ளூர் கிரிக்கெட்டுக்குப் பொறுப்பாக இருந்த மற்றுமொரு உதவித் தலைவரான கே.மதிவாணன் சர்வதேச கிரிக்கெட்டுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விரண்டு பதவிகளும் டிசம்பர் 6ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விசேட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் சிறப்பாகப் பந்து வீசுவோம்

## உமேஷ் யாதவ் நம்பிக்கை

தென்னாபிரிக்காவுக்கு எதிராக எங்களால் சிறப்பாகப் பந்து வீசி 20 விக்கெட்டுகளைக் கைப்பற்ற முடியும் என்று உமேஷ் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. வருகிற 17ஆம் திகதியுடன் ஒருநாள் தொடர் முடிவடைகிறது. அதைத் தொடர்ந்து இலங்கையுடன் மூன்று 20 ஓவர் போட்டிகளில் ஆடவுள்ளது. வரும் 24ஆம் திகதியுடன் இலங்கைத் தொடர் முடிகிறது.

அதன்பிறகு இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட், 6 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகிற 5ஆம் திகதிக் கப்டவுனில் ஆரம்பமாகிறது. தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடர் தொடர்பாக இந்திய அணியின் வேகப்பந்து வீரர் உமேஷ் யாதவ் கூறியதாவது-

தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும். இதனால் எங்கள் மீது அதிகமான எதிர்பார்ப்பு இருக்கும். இந்திய வேகப்பந்து வீச்சைப் பொறுத்த வரை தென்னாபிரிக்காவில் 20 விக்கெட்டுகளைக் கைப்பற்ற முடியும்.

அதற்கான திறமை எங்களிடம் இருக்கிறது. கடந்த 14 மாதங்களாக இந்திய அணி சொந்த மண்ணில் சிறப்பாக விளையாடி வெற்றிகளைப் பெற்று இருக்கிறது. தற்போது வெளிநாட்டில் வெற்றி பெற வேண்டிய நேரம் இதுவாகும் - என்று தெரிவித்துள்ளார்.

## குடாக்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாகாண சபையில் யோசனை ஒன்றை முன் வைத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ. ஆர்னோல்ட். வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் பங் கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:–

யாழ்ப்பாணம் உள்ளிட்ட தரவைக் கடலில் தொழில் செய் யும் மீனவர்களின் வலைக ளில் தற்போது பெருமளவு மீன் குஞ்சுகளே அகப்படுகின்றன. அவை எந்தவொரு பயன்பா டுமின்றிக் கரையில் கொட்டப் படுகின்றன. அவை சிறிது காலம் கடலில் இருந்திருந்தால் மீனவர்களுக்குப் பயனளித்தி ருக்கும். எனவே வடக்கு மாகாணக் கடற்பரப்பில் சிறிய காலப்பகுதிக்கு மீன்பிடித் தடை கொண்டுவரப்படவேண்டும். அந்தக் காலப்பகுதியில் மீன வர்களுக்கு தொழில் இழப்பீடு வழங்கப்படவேண்டும் – என் றார். (ஐ)

## அம்மாச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு –செலவுத்திட்டத்தின் இரண்டாம் நாளில் விவசாய மற்றும் மீன் பிடி அமைச்சு மீதான விவா தத்தில் பங்கேற்று உரையாற் றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் சிறப்பாக உரு வாக்கப்பட்ட திட்டமென்றால் அது அம்மாச்சி உணவகம் என்ற திட்டம்தான். இந்த உணவகத்தில் ஒவ்வொரு நாள்களும் ஏராளமான மக்கள் வந்து உணவு உண்டு செல்கின்றனர்.

குறிப்பாக வடக்கில் பல மாவட்டங்களிலும் உருவாக் கப்பட்டுள்ள இந்தத் திட்டம் மக் கள் மத்தியில் பெரு வர வேற்பைப் பெற்றுள்ளது சிறப் பம்சமாகும். குறிப்பாக இந்த உணவகத்தில்நான்உட்படபலர் உணவு உண்கிறோம்.

இந்த அம்மாச்சி உணவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் குறிப்பிட்ட காலம் வரை மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வந்த போதும்தற்போது அவ்வாறான நிலைமைகளைக் காண முடியாதுள்ளமை கவலைய ளிப்பதாக இருக்கிறது.

இந்த அம்மாச்சி உணவ கத்தில் தற்போது சுகாதாரம் வெகுவாகக் குறைவடைந்து காணப்படுகின்றது. இதுதொடர் பாக மக்களும் எங்களிடம் முறையிட்டுள்ளனர். இதனை நான் அமைச்சின் செயல ருக்கும் திணைக்களத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளேன். எனினும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாத நிலையே உள்ளது – என்றார்.

இந்த விவாதத்தின் முடிவில் அமைச்சர் சிவனேசன் பதி லிளிக்கையில் –

அம்மாச்சிஉணவகங்களில் துர்நாற்றம் மற்றும் இலை யான்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளதாகக் கூறப்ப டுகின்றது. கழிவுகளை உடன டியாக அகற்ற முடியாமல்தான் இலையான் தொல்லை ஏற்ப டுகின்றது. அந்தக் கழிவுகளை உடனடியாக அகற்ற நடவ டிக்கை எடுக்கப்படுகின்றது. அத்தோடு ஊழியர்களை பயன்படுத்திமேலும்ஆளுமை யாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ஐ -7)

## வடக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண் டாம் நாளில் கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் மற்றும் அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோரால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

விவாதத்தில் உரையாற்றிய மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவிக் கையில் –

வடக்கு மாகாணத்தில் தற் போது பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப் படுவதால் மாணவர்கள் பல் வேறு பாதிப்புகளுக்கு உள் ளாக்கப்படுகின்றனர். நேரத் துக்கு எழுந்து பாடசாலைக்குச் செல்லவேண்டியிருப்பதால் காலை உணவைக் கூட உண் ணாது செல்கின்றனர். இத னால் அவர்களின் உடல் நிலை சோர்வடைந்து கற்றலைத் தொடர முடியாது அவதிப்படு கின்றனர்.

இதேபோன்றே ஆசிரி யர்களும் பல்வேறு பிரச்சினை களை எதிர்நோக்கி வருகின் றனர். குறிப்பாகக் குடும்பப் பொறுப்புள்ள ஆசிரியர்களது பாதிப்புக்கள் பல வகைகளில் காணப்படுகின்றன. ஆகவே இதனைக் கல்வி அமைச்சர் மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் – என்றார்.

அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவிக்கையில்,

காலை 7.30 மணிக்கு பாட சாலை ஆரம்பிப்பது பொருத் தம் இல்லை. மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இதனை அமைச்சர் பரிசீ லிக்கவேண்டும் – என்றார்.

இதன்போது சபை இதனை மாற்றச் சம்மதித்தால் பரிசீலிக் கலாம் என்று கல்வி அமைச்சர் பதிலளித்தார். (ஐ -7)

## 7 புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சரணாலயத்துக்குள் கிளை மோர் குண்டை வெடிக்கச் செய்து, மருத்துவர் உள்பட 7 பேரைக் கொலை செய்த குற்றத்தை ஏற்றுக்கொண்டனர் என்று கட்டளை வழங்கிய மேல் நீதிமன்றம் 7 பேருக்கும் இந்தத் தண்டனையை வழங்கியது.

மன்னார், சாவகச்சேரி, வவுனியா, புத்தளம் ஆகியபகுதி களைச் சேர்ந்த 7 பேர் இந்தத் தண்டனையைப் பெற்றுள் ளனர்.

சிமியன் சந்திரயோகி, சிறில் இராசமணி, முத்து மரிக்கார் அப்துல் சலீம், சின்னப்பன் பாக் கியநாதன், சாந்தன்ஸ்ரேனிஸா ரமேஷ், இராகவன் சுரேஷ் மற் றும்ஒருவரே அவர்களில் அடங் குகின்றனர். அவர்கள் 7 பேரும் 2011ஆம் ஆண்டு முதல் சிறைகளில் 8 ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

சதித்திட்டம், பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டமை, 7 பேரின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தமை உள்ளிட்ட 8 குற் றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் 7 பேர் மீதும் பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை அநுராதபுரம் சிறப்பு மேல் நீதிமன்றில் தாக் கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்களின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதி மன்றால் ஏற்றுக்கொள் ளப்பட்டது. அதனடிப்படையி லேயே நேற்று அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப் பட்டது.

வில்பத்து தேசிய சரணால யத்தில் கப் வாகனமொன்றை இலக்கு வைத்து 2006ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி இந்த கிளைமோர் தாக்கு தல் நடத்தப்பட்டது. (ஐ)

## மஹிந்தவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிடையாது என நாடாளுமன்ற உறுப் பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்புஊடகம்ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியி லேயே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

தற்போது தேசிய சுதந்திர முன்னணிக்கும் கூட்டுஎதிர்க் கட்சிக்கும் இடையில் முரண் பாடுகள் ஏற்பட்டு விட்டதாக வும், மஹிந்தவுடனும் பிரிவி னைகள் ஏற்பட்டு விட்டதாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அது பொய் என் றால் அண்மையில் பதுளை யில் மஹிந்த தலைமையில் நடந்த கூட்டத்தை உங்கள் தரப்புபுறக்கணித்ததுஏன்? என விமலிடம் கேள்வி முன்வைக் கப்பட்டது.

அதற்குப்பதிலளித்த விமல், அன்று நடந்த கூட்டத்துக்கு என்னாலும், தினேஷ் குணவர் தனவினாலும், கம்மன்பில வினாலும் கலந்து கொள்ள

பக்கம் 03 ›››

## நாமலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திணைக்களத்துக்கு நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன் நாமல் ராஜபக்ஷ டுபாய் செல்வதற்கு வசதியாக கடவுச் சீட்டை விடுவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

குற்றப்பத்திரத்தில் குறிப்பிட் டப்பட்டசாட்சியாளர்பட்டியலுக்கு மேலதிகமாக முறைப்பாட்டாளர் தரப்பினரால் (சட்டமா அதிபர்) சில சாட்சியங்களிடம் வாக்கு மூலம்பெறப்பட்டதாகவும்அந்த வாக்குமூலங்களை வழங்கு மாறும் பிரதிவாதிகளின் சட்டத் தரணிகளால் கோரப்பட்ட மைக்கு இணங்கவே மேற் குறித்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

2013 ஆம் ஆண்டு ஒக் ரோபர் 1ஆம் திகதி முதல் 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில், நாமல் எம்.பிக் குச் சொந்தமான கவர் கோப்ப ரேஷன்ஸ் நிறுவனத்தின் பங்கு களை விற்று, 3 கோடி ரூபா பணச்சலவையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

அந்த நிறுவனத்தின் உரி மையாளரானநாமல்ராஜபக்ஷ, பணிப்பாளர்களான இந்திக பிரபத் கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம, இரோ சில்வா, சேனானி சமரநாயக்க ஆகிய ஐவருக்கு எதிராகவும் கவர் கோப்ஸ் நிறுவனத்துக்கு எதி ராகவுமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேலும், டுபாயில் இடம் பெறவுள்ள நிகழ்வொன்றின் அதிதியாக நாமல் எம்.பி. பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்றும் இம்மாதம் 20ஆம் திகதியி லிருந்து 31ஆம் திகதி வரை டுபாய் செல்ல அனுமதிக்கு மாறும் அவருடைய கடவுச் சீட்டை விடுவிக்குமாறும் அவரு டைய சட்டத்தரணியால் கோரப் பட்டது.

வெளிநாடு செல்ல அனும தித்த நீதிபதி, கடவுச்சீட்டை விடு விக்குமாறு நீதிமன்றப் பதி வாளருக்கு உத்தரவிட்டதுடன், அது தொடர்பில் குடிவரவு மற் றும் குடியகல்வுத் திணைக் களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறும் உத்தரவிட் டார். (ஐ)

## மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரு மான சி.வீ.கே.சிவஞானம்.

யாழ். மாநகர சபையின் முதல்வர்வேட்பாளர்தொடர்பில் இதுவரை உறுதியான அறி விப்புகள் எதுவும் வெளியாக வில்லை. முதல்வர் வேட்பாள ராகப் பலரது பெயர்களும் அடி படுகின்றன. அதில் ஒருவராக சிவஞானமும் உள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:–

யாழ். மாநகர சபையின் முதல்வர் வேட்பாளராக எனது பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அதில் நான் அக்கறை காட்டவில்லை.

யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஆர்.ஜெயசேகரம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தி யாதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட், முன் னாள் மாநகரசபை உறுப்பினர் ராஜதேவன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன்சூசிறில்ஆகியோரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளன.

என்னைப் பொறுத்தவரை இந்தப் போட்டி ஆர்னோல்ட், ஜெயசேகரம், வித்தியாதரன் ஆகிய மூவருக்கு இடையே அமையலாம். ஆனால் அதில் சரியானதொரு முடிவை எடுக் காமல் போனால் ஒருவேளை சென்ற மாநகர சபைத் தேர்த லில் ஏற்பட்ட நிலையும் ஏற்ப டலாம் – என்றார். (ஐ-7)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரவு – செலவுத் திட்டத்தில் 40 வீதம் கல்விக்கு ஒதுக்கப்பட் டுள்ள நிலையில் அதனை நாங்கள் சரிவரப் பயன்படுத் திக்கொள்ளவேண்டுமென்றும் அவர் கோரினார்.

வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு –செலவுத்திட்டத்தின் இரண்டாம் நாளில் விவசாய மற்றும் மீன் பிடி அமைச்சு மீதான விவாதத் தில் பங்கேற்று உரையாற் றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான மொத்தச் செலவீனத்தில் 40 வீதம் கல்விக்கு ஒதுக்கப்படு கின்றது. அதே போன்று கடந்த காலங்களிலும் நிதி ஒதுக் கப்பட்டபோதும் தற்போதும் பல குறைபாடுகள் காணப்படு கின்றன. இவ்வாறு அதிக நிதி ஒதுக்கப்படுவதால் நாங்கள் பயனடைந்திருக்கிறோமாஎன்ற கேள்வியும் எழுகின்றது.

எமது எதிர்காலத் தலை முறையைச் சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதற்குக் கல் வியைச் சரியான முறையில் நாங்கள்பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்பொது எமக்கான காலங்கள் குறைவாக இருந் தாலும் எதிர்காலத்தில் கல் வியைமீளவும்பழையநிலைக்கு உயர்த்திக் கொள்வதற்குச் சிறந்ததொரு பாதையை அமைத்துக்கொடுக்கவேண்டும்.

நாங்கள் பல நியதிச் சட்டங் களை இந்தச் சபையில் நிறை வேற்றியுள்ளபோதும்அவற்றை இன்று வரை பயன்படுத்தாது மத்திய அரசின் கொள்கை களையே நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.ஆகவேஇனிமே லாவது எங்களது நியதிச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டும்.

எங்களுக்கு உள்ள பலமே எங்களது நியதிச் சட்டங்கள் தான். ஆகவே அதனை நாங் கள் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. குறிப்பாக மத்திய அரசிடம் அதிகாரங்களைக் கேட்கின்ற நாம், எங்களிடம் உள்ள அதிகாரங்களை விட்டுக் கொடுக்கமுடியாது – என்றார்.

விவாதத்தின் முடிவில் மேற் படி அறிக்கையை வழி மொழி வதற்கு எழுந்தபோது சபையில் 16 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளதைச் சுட்டிக்காட்டிய தவராசா, எமது மாகாணத்தில் மிக முக்கியமாக உள்ள கல்வி பற்றி நாங்கள் பேசும்போது எமது உறுப்பினர்கள் பலரும் வெளியேறியுள்ளமையைப் பார்க்கும்போது மிகக் கவ லையாக உள்ளதாகவும் கூறி னார். (ஐ-7)

## ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்சியின் தேசிய அமைப் பாளரும் சட்டத்தரணியு மான வி. மணிவண்ணன் தெரிவித் துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் சைக்கிள் சின்னத்தில் போட்டி யிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சாவகச்சேரி நகரசபைக்கான வேட்பு மனுவைநேற்றுப்புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியள வில் தாக்கல் செய்தனர்.

சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன்யாழ். மாவட் டச் செயலகத்திலுள்ள தேர்தல் கள் அலுவலகத்துக்குச் சென்ற கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண் ணன் வேட்புமனுவைத் தாக் கல் செய்தார்.

வேட்புமனுத்தாக்கல்செய்த பின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த வி.மணிவண்ணன்,

நாங்கள் சாவகச்சேரி நகர சபைக்கான வேட்புமனுக்க ளைத் தாக்கல் செய்திருக்கின் றோம். சாவகச்சேரி நகர சபையில் மிகக் கடுமையான போட்டியைக் கொடுப்பதற்கு எமது வேட்பாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் ஒரு மாற்றத்தை எதிர் பார்க்கின்றோம். அந்த மாற் றத்தைத் தரக்கூடிய சிறந்த வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்திருக்கின்றோம். ஊழலற்ற ஒரு நகரசபையை உருவாக்கி நாங்கள் நிர்வ கிக்கவேண்டும் என்ற விருப் பத்திற்கமைவாக வேட்பாளர் களை இனங்கண்டு தெரிவு செய்திருக்கின்றோம்.

இந்தத் தேர்தலை வெறு மனே உள்ளூராட்சித் தேர்த லாகக் கடந்துவிடமுடியாது. ஒரு புதிய அரசமைப்பு மாற்றத் துக்கான இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஒற்றையாட்சியே வலியுறுத் தப்பட்டுள்ளது. அந்த ஒற் றையாட்சியை நிராகரிக்கக் கோருகின்ற ஒரு நாடி பிடித்துப் பார்க்கக் கூடிய ஒரு தேர்த லாகவே இந்தத் தேர்தல் அமைந்திருக்கின்றது.

ஒற்றையாட்சியை நிராக ரிக்கவேண்டும் என்ற விட யத்தையும் இந்தத் தேர்தலின் ஊடாக நாங்கள் எடுத்துக் கூறவேண்டும். இந்த அரசி யலமைப்பு மாற்றத்துக்கான இடைக்கால அறிக்கையை ஆத ரித்து ஒரு தரப்பு களமிறங் கியுள்ளது உங்களுக்குத் தெரிந்த விடயம். எங்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்த லில் எங்கள் கோசமாக இருக்கப்போவது ஒற்றையாட் சியை நிராகரிப்பதாயின் எங்களுக்கு வாக்களியுங்கள் என்பதுதான். ஒற்றையாட்சியை மக்கள் நிராகரிக்கப்போகின்ற முதல்கட்ட ஒரு வாக்கெடுப் பாகவே இந்தத் தேர்தல் பார்க்கப்படும் – என்றார். (ஐ)

# நம்பி வாக்களித்து நாம் ஏமாந்துவிட்டோம்; இனியும் வாக்களிக்கக்கூடிய நிலை இல்லை!

## முல்லைத்தீவில் 280 ஆவது நாளைக் கடந்து போராடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஆதங்கம்

முல்லைத்தீவு, டிசெ. 14

ஒவ்வொருவரையும் நம்பி வாக்களித்து ஏமாந்துவிட்டோம் இனியும் நாம் வாக்களிக்கக் கூடிய நிலையில்தாம் இல்லைஎனமுல்லைத்தீவில்280ஆவது நாளைக் கடந்து போரா டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தாய் ஒருவர் தெரிவித் தவை வருமாறு:-

எங்களுடைய போராட்டத்தை இது வரை யாருமே கண்டுகொள்ளவில்லை. நாங்கள் ஏங்கிக் கொண்டு இருக்கிறோம். எங்க ளுடைய பிள்ளைகள் கிடைப்பார் கள் என இந்தா முடிவு சொல் வார் கள் அடுத்தமாதம் முடிவு சொல்வார்கள் அடுத்தமாதம் பதில் கிடைக்கும் என ஒவ்வொரு தடவையும் நாங்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு யாருமே முடிவு சொல லவில்லை. எத்தனயோ சந்திப்புக் களுக்கு சென்று எண் ணற்ற கடிதங் களை குடுத்து எல் லோரையும் கேட்டுள் ளோம். இதுவரை யாரும் எந்த பதிலும் சொன்னதில்லை.

நாங்கள் யுத்தத்தால் இடம் பெயர்ந்து தங்கியிருந்த முகாமில் இருந்து மீள்குடி யேற்றம் வந்தவுடன் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வந்தார். நாங்கள் எங்களுடைய பிள் ளைகள் எங்களுக்கு கிடைப்பார் கள் என்று நம்பிக்கை யோடும் எங்களுக்கு ஓர் விடுதலை கிடைக் கும் என்ற ஒரு ஆவலுடன் வாக் களித்தோம். ஆனால்,எங்களுக்கு எந்த முடிவும் கிடைக்க வில்லை.

அதனைத் தொடர்ந்து அதே போல் எங்களுடையமைத்திரிஜனாதிபதிவந்தார். அவரையும் நாங்கள் கூடிய பாகம் எதிர் பார்த்தோம் அவரும் அதையே செய்தார் திருப்பவும் இப்போது எங்களிடம் வந்து வாக்குக் கேட்கின்றனர்.

ஆனால்,நாங்கள்வாக்களிக்கக்கூடிய நிலையில் இல்லை என்றும் எங்களு டைய பிள்ளை களைத் தொலைத்துவிட்டு தேடி ஒரு முடிவுமில்லை எங்களுக்கு ஒரு ஆறுதலும் இல்லை. இப் போது தங் களுக்கு ஒருதேவைவரும்போது எங்களை நாடி வருகின்றனர். உங்களுக்கு எங் களுடைய இரண்டு கதவும் திறந்திருக்கும். எப்போதும் எங் களை வந்து சந்தியுங்கள் நாங் கள் வேண்டியது செய்வோம் என்று ஆனால் அதை நாங்கள் இன்னும் நம்பத் தயாரில்லை.

எங்கட பிள்ளைகள் தொடர் பில் எங்களுக்கு ஒரு நல்ல முடிவு தாருங்கள் எங்கட பிள்ளைகள் தொடர்பான ஒரு பதில் தாருங் கள். இனியும் எங்களால் தாமதிக்க முடியாது.

ஏனென்றால், இப்போது ஒன்பது வருடங்கள் ஆகிவிட்டது. எங்களுக்கு யோசித்து ஆளுது கவலைப்பட்டு பிள் ளைகளைப்பற்றியேசிந்தித்துசொல்லமுடி யாதஅளவுக்குவருத்தங்கள்வந்துவிட்டன.

அதனால், எங்களால் நடக் கவோ கொஞ்ச நேரம் நிக்கவோ முடியாமல் உள்ளது. ஏனென் றால், நாங்கள் வேதனைப்பட்டு கிறோம். எங்களுக்கு மிக விரைவில் நல்ல ஒரு தீர்வைத் தாருங்கள் என மன்றாட்டமாக கோருகிறேன்.

அதுதான் கூறுவார்கள் மழை நின்ற பின்னும் சாரல் ஓய வில்லை என்று அதே நிலைமை தான் எமக்கும்.

யுத்தம் முடிந்துவிட்டது. ஆனால், எமக்கு இன்னும் யுத்தம் முடியவில்லை. எங்களுடைய பிள்ளைகளை பற்றிய ஏக் கமும் கவலையும் எங்களு டைய பிள்ளை கள் சாப்பிடுகிறார் களா இல்லையா எங்க எப்படி இருக்கிறார்கள் என்று ஏங்குகிறோம்.

நாங்கள் பிள்ளைகளை ஆசையாக வளர்த்தோம். மற்ற பிள்ளைகள் சந்தோச மாக உலா வித்திரிய எமது பிள்ளைகள் சிறை வாழ்க்கை வாழ்கின்றனர்.

எமக்கு ஒருபதில் தாருங்கள் எமது பிள்ளைகள் இருக்கிறார் களா இல்லையா என்ன நடந் தது என்ன செய்தீர்கள் எங்கு வைத்திருக்கிறீர்கள் என்பது தொடர்பில் தயவு கூர்ந்து உங் களைக் கெஞ்சிக் கேட்கிறோம் எமக்கு ஒரு பதில் தாருங்கள்.

நாங்கள் சாவதற்கு முன்னம் எங்களு டைய பிள்ளைகளை நாம் பார்ப்பதற்கு இன்றைக்கு இருப்பமோ நாளைக்கு இருப் பமோ என்று தெரியவில்லை. எனது அரு கில் மகனைத் தேடிய தாயொருவர் இருந் தார் அவரும் அண்மையில் விபத்தில் இறந்து விட்டார்.

இனி அந்தப் பிள்ளையை யார் தேடு வது இவ்வாறு எமது பிள்ளைகள் அநா தைகளாக்க படுகிறார்கள். தாய் சகோதரம் இருந்தும் பயனில்லை என்ற நிலை உரு வாகிறது. இன்னும் எத்தனை காலத்துக்கு இது நீடிக்கும் என்று தெரியாமல் உள்ளது. எனவே எமக்கு ஒரு பதில் உடனடியாகத் தருமாறு மன்றாட்டமாக கோரிக்கை விடுக் கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வித்தியா படுகொலை வழக்கின் ஆவணங்கள் உயர் நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.14

புங்குடுதீவு மாணவி வித்தியா படு கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 குற்றவாளிகளால் முன் வைக்கப்பட்ட மேன்முறையீட்டு மனு வுக்கு அமைவாக, தீர்ப்பாயத்தால் நடத்தப் பட்ட மூல வழக்கு ஏடுகள் மற்றும் அதன் பிரதிகள் நேற்று புதன்கிழமை உயர் நீதி மன்றில் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதி வாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் மற் றும் உத்தியோகத்தர்கள் நேரில் சென்று வழக்கு ஆவணங்களை உயர் நீதிமன் றப்பிரதிப் பதிவாளர் சட்டத்தரணி கிரிஷானி டி கோத்தகொடவிடம் கையளித்தனர்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கொடூர மாகப் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலை மையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன் னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாச கர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) விசாரணைகளை மேற்கொண்டது.

விசாரணைகளின் நிறைவில் கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதி 9 எதிரிகளில் 7 பேர் குற்றவாளிகளாக இனங்காணப் பட்டு அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன், கூட்டு வன் புணர்வு மற்றும் சதித்திட்டம் தீட்டியமை ஆகிய குற்றங்களுக்கு 7 குற்றவாளி களுக்கும் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. 2 பேர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் 7 பேரைக் குற்றவாளி களாகத் தீர்ப்பாயத்தின் 3 நீதிபதிகளுமே ஏகமனதாகத் தீர்மானத்திருந்தனர்.

இந்த நிலையில் 5 குறையாத நீதியர சர்கள் அடங்கிய அமர்வின் முன்னி லையிலேயே தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாட்டுக்கு அமைவாக உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு மனு முன்வைக்கப்பட்டது.

சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமார் மற்றும் அவரது சகோதரர் மகாலிங்கம் சசிதரன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி யும் பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபால சிங்கம் தவக்குமார், தில்லைநாதன் சந்திர காசன், சிவதேவன் துஷாந்த் மற்றும் ஜெய தரன் கோகிலன் ஆகியோர் சார்பில் சட்டத் தரணி மஹிந்த ஜெயவர்த்தனவும் மேன் முறையீட்டு அறிவித்தலை ஒக்ரோபர் நடுப் பகுதியில் முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப் பாயத்தின் வழக்கு ஏடு 3 ஆயிரத்து 540 பக்கங்களைக் கொண்டது. அத்துடன், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றின் வழக்கு ஏடு ஆயிரத்து 53 பக்கங்களைக் கொண்டது.

இரண்டு வழக்கு ஏடுகளையும் இணைத்து 4 ஆயிரத்து 540 பக்கங் களை உடைய 15 பிரதி வழக்கு ஏடுகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் தயாரிக் கப்பட்டன. அவற்றில் 14 பிரதி வழக்கு ஏடு களும் மூல வழக்கு ஏடுகளுமே நேற்று உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டன.

மேலும் ஒரு பிரதி வழக்கு ஏடு யாழ்ப் பாணம் மேல் நீதிமன்றில் பேணப்பட்டு கிறது. (ஐ)

# வவுனியாவில் இரு சபைகளுக்கு ஈ.பி.டி.பி. நேற்றுக் கட்டுப்பணம்



வவுனியா, டிசெ.14

வவுனியா மாவட்டத் தின் 5 சபைகளில் வவு னியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஆகியவற் றில் போட்டியிடுவதற் கான கட்டுப் பணத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) நேற்று வவுனியா மாவட்ட உத வித் தேர்தல் ஆணை யாளர் அலுவலகத்தில் செலுத்தியது.

இதன்பின் ஊடகங் களுக்குக் கருத்து தெரி வித்த ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கு.திலீபன்,

ஈழமக்கள்ஜனநாயகக் கட்சி சார்பாக வவுனியா நகரசபை மற்றும் வவு னியா தெற்குப் பிரதேச சபை என்பவற்றுக்கான கட்டுப்பணம் செலுத்தப் பட்டுள்ளது. மக்கள்போலித் தேசியம் பேசுபவர்களை யும், போலி வாக்குறுதி களை கொடுப்பவர்களை யும்இனங்காணத்தொடங் கியுள்ளனர். இம்முறை நடைபெறப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வவுனியாவில் ஆழ மாகக்கால்பதிக்கும். இளை ஞர்களின் வரவேற்பு அதி கரித்துள்ளது. கிராமங் கள், நகரங்கள் எனச் செல்லும் இடமெல்லாம் எமதுகட்சியையும், அதன் செயலாளர் நாயகத்தின் அபிவிருத்தியையும் மக் கள் அங்கீகரிக்கத் தொடங் கியுள்ளனர். இம்முறை புதிய மாற்றத்துடன் அபி விருத்தி நோக்கி எமது கட்சி பயணிக்கும் - என் றார். (சு-100)

## நாள்குறிப்பில் மஹிந்தவின் உருவப்படம்:

# பஸிலுக்கு எதிரான வழக்கின் இடைக்காலத் தடை நீடிப்பு

கொழும்பு, டிசெ 14

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் கித்சிறி ரணவக்கவுக்கும் எதிரான வழக்கை, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரிப்பதற்குப் பிறப்பிக்கப்பட் டிருந்த இடைக்காலத் தடையுத் தரவை பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை நீடித்து மேன்முறை யீட்டு நீதிமன்றம், நேற்றுக் கட்டளை யிட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட 50 இலட்சம் நாள் குறிப்புகளை திவிநெகும திணைக் களத்தினூடாக அச்சிட்டு, அரசுக்கு 2 கோடி 94 இலட்சம் ரூபா நட் டத்தை ஏற்படுத்தினர் என்ற குற் றச்சாட்டில், வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது.

இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபராக பஸில் ராஜபக்ஷ வும் இரண்டாவது சந்தேகநபரான திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்கவும் பெயர் குறிப் பிடப்பட்டிருந்தனர்.

தற்போதைய நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் வழக்கை விசாரிப்பதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் வேறொரு நீதிபதி முன்னிலையில் இந்த வழக்கை விசாரிக்க உத்தர விடுமாறும் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய் யப்பட்டிருந்தது.

அந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதியர சருமான எல்.டி.பி.தெஹிதெனிய முன்னிலையில், எடுத்துக்கொள் ளப்பட்டபோதே மேற்கண்ட உத் தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், பிரதி வாதிகளின் எழுத்துமூல எதிர்ப்பை சமர்ப்பிப்பதற்கான தினமாக பெப்ர வரி முதலாம் திகதியும் நிர்ணயிக்கப் பட்டது.

பாரியமோசடி, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், அரசசொத்துகள், சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோ கம் செய்தமை தொடர்பாக விசா ரணைசெய்யும்ஜனாதிபதி ஆணைக் குழுவின் உறுப்பினராக இருந்த நீதி பதி கிஹான் குலதுங்க தனக்கெதி ராக விசாரணை செய்தார் என்று பஸிலின் மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஐ)

# ‘தமிழருக்கான மனித உரிமை’ லண்டன் வெம்பிலியில் மாநாடு










சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த ஞாயிறன்று நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் லண்டனில் வெம்பிலி சர்வதேச விருந்தினர் விடுதியில் ‘தமிழர்களுக்கான மனிதவுரிமை’ என்னும் தலைப்பிலான ஒரு மாநாடு நடத்தப்பட்டது.

ஈழத் தமிழ் இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை வெளிப்படுத்தி, இலங்கையில் தொடரும் காணி அபகரிப்பு, இரகசிய சித்திரைவதை முகாம், அரசியல்கைதிகள் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அம்பலப்படுத்தும் வகையிலான கருத்தரங்கும், விழிப்புணர்வு நிகழ்வும் இதன்போது இடம்பெற்றன.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பேராசிரியர் சொர்ணராஜ், தமிழ் இனத்திற்கு எதிராக நடத்தப்பட்ட மற்றும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இனப்படுகொலைக்கான நீதியை எப்படி வென்றெடுக்கலாம் என்பது குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைக்கு எதிராகப் பாவிக்கப்படும் அரசமைப்பின் ஆறாம் திருத்தச் சட்டத்தை இலங்கையில் இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்பதற்காக ஆயிரத்து 705 சட்டத்தரணிகளின் கையொப்பத்துடன் கூடிய பத்திரத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிவைப்பதற்கும் அங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் லண்டன்வாழ் பொது மக்களும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டாளர்களும், ஈழ உணர்வாளர்களும் கொண்டிருந்தனர்.




## அர்ஜுனவின் கின்னஸ் சாதனை



கொழும்பு காலி முகத்திடலில் கடந்த ஆண்டு நிறுவப்பட்டிருந்த செயற்கை கிறிஸ்மஸ் மரம், உலகின் மிக உயரமான செயற்கை கிறிஸ்மஸ் மரம் என்ற கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் முயற்சியில், 72.1மீற்றர் உயரத்தில் இந்த கிறிஸ்மஸ் மரம் நிர்மாணிக்கப்பட்டது. கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகக் காலி முகத்திடலில் அமைக்கப்பட்ட இந்த செயற்கை கிறிஸ்மஸ் மரம் கடந்த ஆண்டு டிசெம்பர் 24ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)










இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.